18.11.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### எலுமிச்சை மூலம் ஆண்டுக்கு ரூ. 40 ஆயிரம் லாபம்

எலுமிச்சை விளைச்சல் மூலம் செலவு போக ஆண்டுக்கு ரூ.40 ஆயிரம் லாபம் பார்த்து வருகிறார் சிவகங்கை தேவனிப்பட்டி விவசாயி பி.மாதவன். இவர், 3 ஏக்கரில் எலுமிச்சை கன்றுகளை நடவு செய்து வறண்ட பூமியில் பழத்தை விளைவித்து வருகிறார்.விவசாயி மாதவன் கூறியதாவது: 3 ஏக்கர் நிலத்தில் 2009ல் ஏக்கருக்கு 90 கன்று வீதம் நடவு செய்தேன். தொடர்ந்து 5 ஆண்டு பராமரிப்பிற்கு பின், ஒரு ஆண்டாக எலுமிச்சை விளைச்சல் நடந்து வருகிறது. குளிர்ச்சி காலமாக இருப்பதால், பூக்கள் அதிகரித்து எலுமிச்சம் பழம் விளைச்சலும் அதிகரிக்க துவங்கியுள்ளன. வாரம் தோறும் ஏக்கருக்கு 135 கிலோ (சிப்பம்: 45 கிலோ) எலுமிச்சம் பழம் கிடைக்கும். ஒரு சிப்பத்தின் விலை ரூ.1,100ல் இருந்து ரூ.1,500 வரை விற்கும். இப்பழங்களை மேலூர், சிவகங்கை சந்தைகளில் விற்பனை செய்து வருகிறேன். கோடை காலம், பண்டிகை காலங்களில் எலுமிச்சம் பழத்தின் தேவை அதிகரிக்கும். அப்போது ஒரு சிப்பம் ரூ.2,000க்கு விற்கும். மொத்த வியாபாரிகள் பழத்தை வாங்கி சென்று, முதல் தரத்தை ஜூஸ், சர்பத் போட பயன்படுத்துவர். 2ம் தர பழத்தை ஊறுகாய் உள்ளிட்ட எலுமிச்சை சார்ந்த உணவு பொருட்கள் தயாரிக்க பயன்படுத்துவர். எலுமிச்சம் பழத்திற்கு எந்த காலத்திலும் "மவுசு' குறையாது.தற்சமயமுள்ள விலை நிலவரப்படி, எலுமிச்சம் பழம் ஒரு ஆண்டுக்கு ஏக்கருக்கு ரூ.1.58 லட்சம் வரை விற்பனையாகும். இதில், உரம், பராமரிப்பு, தொழிலாளர்கள் சம்பளம், இதர செலவு போக, ஆண்டுக்கு ரூ.40 ஆயிரம் வரை லாபம் கிடைக்கும், என்றார். விவசாயி தொடர்புக்கு 94431 37350.

**-என்.வெங்கடேசன், சிவகங்கை.**

## வாழை சாகுபடியார்களின் கவனத்திற்கு...

வாழையில் சாம்பல் மற்றும் போரான் சத்து குறையை நிவர்த்தி செய்ய... சாம்பல் சத்து பற்றாக்குறை அறிகுறிகள் முதிர்ந்த இலைகள் ஓரங்களில் இருந்து ஆரஞ்சு கலந்த மஞ்சள் நிறமாக மாறும். பின்னர் இலையின் ஓரங்கள் காய்ந்தும் உள்நோக்கி சுருண்டும் காணப்படும். இலையின் அளவும் சிறுத்து விடும். முற்றிய நிலையில் இலைகள் வெளிவராது மற்றும் பூ வருவதும் தாமதமாகும். வாழைப்பழத்தில் தரமும் குன்றிவிடும். நிவர்த்தி: 20 கிராம் பொட்டாசியம் குளோரைடை ஒரு லிட்டர் நீரில் கரைத்து இலைவழியாக 10 நாட்களுக்கொரு முறை அறிகுறிகள் மறையும் வரை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

போரான் சத்து பற்றாக்குறை அறிகுறிகள்: இளம் இலைகளில், சில நரம்புகள் பக்கம் பக்கமாக நெருக்கமாகவும், நரம்புக்கு இணையாக மஞ்சள் நிறப்புள்ளிகள் வளைந்து வளைந்து ஏணி போன்ற தோற்றத்தில் உருவாகும். இலைக்குருத்துக்கள் விரியாமல், இளம் இலைகள் கிழிந்து, பழுப்பு நிறமாக மாறும் பழங்களில் வெடிப்பு தோன்றும். நிவர்த்தி: இவ்வாறான அறிகுறிகள் தென்பட்டதும் நூறு லிட்டர் நீரில் 200 கிராம் போராக்ஸ் கலந்த கரைசலை இலைகளின் மேல் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**- டாக்டர் ம.குணசேகரன், பருத்தி ஆராய்ச்சி நிலையம், திருவில்லிபுத்தூர்-626 125.**

## ஆந்திராவில் பயங்கர மழை

திருப்பதி: ஆந்திராவில் பெய்து வரும் கன மழையால், மாநிலத்தின் நான்கைந்து மாவட்டங்கள், மழை மற்றும் வெள்ள நீரில் மிதக்கின்றன; மழைக்கு, ஐந்து பேர் பலியாகியுள்ளனர்.

தமிழகத்தை மிரட்டிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், நேற்று முன்தினம் முதல், ஆந்திராவை நோக்கி நகர்ந்ததால், சித்தூர், நெல்லூர், கடப்பா போன்ற மாவட்டங்களில், கனமழை பெய்து வருகிறது. இதனால், தாழ்வான பகுதிகள்,

மழை நீரில் மூழ்கியுள்ளன. கனமழையை ஒட்டி, இம்மாவட்டங்களில் உள்ள, அரசு பள்ளி, கல்லூாரிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது.மழை மற்றும் ஆறுகளின் வெள்ளப் பெருக்கு காரணமாக, ஐந்து பேர் இறந்துள்ளதாக, தெலுங்கு தேசம் கட்சியைச் சேர்ந்த, முதல்வர் சந்திரபாபு நாயுடு அரசு அறிவித்துள்ளது. மீட்புப் பணிகளை, முதல்வர் நாயுடு முடுக்கி விட்டுள்ளார்.

## சின்ன சின்ன செய்திகள்

**மாடித்தோட்டம்:** மாடித்தோட்ட அமைப்பில் பின் பகுதியில் சுவர்களில் துணிகளை காயவைப்பதற்காகவும் அல்லது விசேஷ காலங்களில் பந்தல் அமைப்பதற்கான இரும்பு வளையங்கள் அமைத்திருப்பார்கள். அவைகளில் உயரமான நான்கு மரத்திலான கம்புகள் அல்லது இரும்பாலான கம்பி குழாய்களை அமைத்து அதில் கம்பிகளைக் கொண்டு பின்னல்களை அமைத்து அதன்மீது படரும். காய்கறிகளான பாகல், கோவைக்காய், பீர்க்கன் போன்றவற்றை மரப்பெட்டிகளையோ அல்லது மண் தொட்டிகளையோ வைத்து அதில் செம்மண், மணல், மக்கிய உரம் ஆகியவற்றை சரிசமமாகக் கலந்து பெட்டிகளின் மேல் விளிம்பிலிருந்து கீழே மூன்று அங்குலம் இடைவெளி இருக்குமாறு நிரப்பி வளர்க்கலாம். மாடித்தோட்டத்தில் முக்கிய பிரச்னை மண் இறுகி போவது நாம் என்ன தான் மணலையும், செம்மண்ணையும் கலந்து, தேவையான அளவு உரம், இலைக்கு போன்றவற்றை போட்டு கலந்து எடுத்தாலும் நீர் ஊற்ற ஊற்ற மெதுவாக மண் இறுகி போகும் தன்மையை பெற்று விடும். இதில் ரோஜா போன்ற ஒட்டுச்செடிகள் தாக்குப்பிடித்து வளர்ந்து விடும். ஆனால் கீரை, காய்கறி செடிகள் வளர மிகவும் சிரமப்படுகின்றன. அதே நேரத்தில் காற்றின் வேகமும் மேலே அதிகமாக இருப்பதால் இலைகள் வேகமாக வளர்ச்சிக்கு உட்படுகின்றன.

எனவே இதனைத் தவிர்க்க மாடித்தோட்டத்தில் மிக முக்கியமாய் மணலை விட்டு விட்டு, அதற்கு பதிலாக தேங்காய் நார் தூளை அல்லது கோகோ பித் அல்லது தேங்காய் நாரிலிருந்து உதிரும் பவுடர் போன்ற பொருட்களைப் பயன்படுத்தலாம். இந்த பவுடர் வெறும் ஊடகமாக மட்டுமே பயன்படும். அதில் செடிக்கு தேவையான எந்த கனிமங்களோ சத்துக்களோ கிடைக்காது. இருப்பினும் நீரை நன்றாக வெகு நாட்களுக்கு பிடித்து வைத்துக் கொள்ளும் இந்த பவுடருடன் ஏதாவது மக்கிய தாவர கழிவு உரம் மற்றும் கொஞ்சம்

செம்மண் கலந்து தென்னை நார்க்கழிவு, செம்மண், மண்புழு உரம் 2:2:1 என்ற விகிதத்தில் கலவையைத் தயார் செய்து பயன்படுத்தலாம். மொட்டை மாடியில் பரப்பிற்கேற்றவாறு பல பகுதிகளைப் பிரித்து தொட்டிகளையும் பெட்டிகளையும் சீராக வரிசையாக வைத்து பயிர் வளர்க்கலாம். தேவையான இடைவெளி கொடுத்து, எல்லா செடிகளுக்கும் சூரிய வெளிச்சம் கிடைக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.இயற்கை விவசாயமும், நவீன தொழில்நுட்பங்களும் வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.என்.சுவாமிநாதன் தெரிவிப்பது யாதெனில், நமது விஞ்ஞானிகள் அறிவியல் ரீதியிலான ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம், ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு விஞ்ஞான முறையில் நீர்பயன்பாடு ஆகியவற்றை சிபாரிசு செய்கின்றன. குறுகிக் கொண்டே வரும் நிலப்பரப்பிலிருந்து நாம் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். நிலம் மட்டுமல்ல நீரும் குறைந்து கொண்டே வருகிறது.இயற்கை உரங்களையும், கனிம ரசாயன உரங்களையும் ஒன்றுக்கொன்று எதிரானவை என்று பார்க்கக் கூடாது. இயற்கை இடுபொருட்கள் மண்ணின் உயிரித்தன்மையை அதிகப்படுத்துகின்றன. கனிம உரங்கள் பவுதீக வேதித்தன்மையை அதிகப்படுத்துகின்றன. ஆனால் கனிம உரங்களால் நுண்ணூட்டச் சத்துக்களைக் கொடுக்க முடிவதில்லை. இதனால் மண்ணின் நுண்ணூட்டச்சத்துக்களை அதிகப்படுத்த குறைந்தளவு கனிம உரங்களோடு பயோ உரங்களையும் (இயற்கை உரங்கள்), தொழு உரத்தையும் கலந்து கொடுப்பது சிறந்த முறை. இதில் பசுந்தாள் பயிர்களையும் சேர்த்துக் கொள்ளலாம். இதோடு நைட்ரஜன் சத்துக்களை கொடுக்கக்கூடிய பயறு வகைகளையும் சேர்க்கலாம். இப்படிக் கலந்து செய்யும் முறையே சரியான விவசாயம். **ஏலத்தோட்டம் பராமரிப்பு:** நாற்றங்காலில் செடிகளைக் கலைத்து விட வேண்டும். நோய் தாக்கிய செடிகளை நீக்கி விட வேண்டும். நாற்றழுகல் நோய் தாக்குதல் இருந்தால் 0.2 சதம் காப்பர் ஆக்ஸிகுளோரைடு கரைசல் மண்ணில் செடியைச் சுற்றி ஊற்ற வேண்டும் அல்லது 0.2 சதம் மான்கோசெப் அல்லது டிரைகோடெர்மா அல்லது சூடோமோனாஸ் அல்லது பேசில்லஸ் இட வேண்டும்.

தோட்டத்தில் ஆங்காங்கே இடைவெளியில் புதுசெடிகளை நட வேண்டும். நிழல் தரும் மரக்கன்றுகள் நடுவதையும் திறந்தவெளி உள்ள பகுதியில்

நடவேண்டும். செடிகளைச் சுற்றி தேங்கியுள்ள தண்ணீரை வடித்து விடுவது அவசியம். பாசன சாகுபடி தோட்டங்களில் இரண்டாவது முறையாக எக்டருக்கு 41.5: 41.5:83 ஒஞ் என்.பி.கே.1 ஏக்கர் என்ற அளவிலும், மானாவாரி தோட்டங்களில் எக்டருக்கு 37.5:37.5:75 கிலோ தழை, மணி, சாம்பல் சத்துக்கள் 1 எக்டர் என்ற அளவில் இட வேண்டும். துத்தநாக குறைபாடு உள்ள தோட்டங்களில் சிங்க்சல்பேட் 250 கிராம் 100 லிட்டர் தண்ணீர் கரைத்து செடிகளின் மீது இலைகளின் மேல் தூவி கீழ்பரப்பில் படும்படி தெளிக்க வேண்டும்.

**தொடரும் மழையால் அழுகும் காய்கறிகள்**

பெங்களூரு:பெங்களூரு உட்பட கர்நாடகாவின் பெரும்பாலான மாவட்டங்களில், மேலும் சில நாட்கள் மழை நீடிக்கும் என்று, வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. கடந்த சில நாட்களாக, பெங்களூரு, கோலார், சிக்கபல்லாப்பூர், சாம்ராஜ்நகர் உள்ளிட்ட சில மாவட்டங்களில், தொடர்ந்து மழை பெய்து வருவதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.மாநிலத்தின் பெரும்பாலான மாவட்டங்களில், குளிரின் தீவிரம் அதிகரித்துள்ளது. வெளியில் வரவே பலரும் அஞ்சுகின்றனர். பெங்களூரில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், பழங்கள், காய்கறிகள் வியாபாரத்தில் மந்தநிலை காணப்படுகிறது. சுற்றுப்புற ஊர்களில் இருந்து, கலாசிபாளையா, மல்லேஸ்வரம், யஷ்வந்த்பூர் உட்பட மற்ற சந்தைகள் வழியாக, தினமும், 100 டன் காய்கறிகள், தமிழகத்துக்கு அனுப்புவது வழக்கம். தமிழகத்தில் தொடர்ந்து மழை பெய்வதால், பெங்களூரில் இருந்து காய்கறிகளை கொண்டு செல்ல முடியவில்லை. கர்நாடகாவிலும் மழை பெய்வதால் காய்கறிகள் அழுகி, வீணாகி வருகிறது. மழை காரணமாக, மக்களும் சந்தைக்கு வர தயங்குகின்றனர்.காய்கறிகள் அழுகுவதால், கிடைத்த வரை போதும் என்று குறைந்த விலைக்கு, காய்கறிகளை விவசாயிகள் விற்க முன்வரலாம் என்று, பெங்களூரு காய்கறி வியாபாரிகள் சங்கத்தலைவர் கோபால் தெரிவித்துள்ளார்.

**பாதுகாப்பை பலப்படுத்த திட்டம்: தோட்டக்கலைத்துறை அறிக்கை**

பெங்களூரு,:கப்பன் பார்க் பாலியல் பலாத்கார சம்பவத்துக்கு பின், பாதுகாப்பை பலப்படுத்துவது குறித்து, தோட்டக்கலைத்துறை பல்வேறு ஆலோசனைகளை அரசுக்கு அளிக்கவுள்ளது.
இருவர் கைதுகடந்த, 11ம் தேதி இரவு, 192.19 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள கப்பன் பார்க்கில், 35 வயது பெண்ணை, பாலியல் பலாத்காரம் செய்த, தனியார் நிறுவன செக்யூரிட்டிகள் இருவர் கைது செய்யப்பட்டனர்.
இச்சம்பவத்தை அடுத்து, கப்பன் பார்க்கில் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்த, விரிவான திட்ட அறிக்கையை, தோட்டக்கலைத்துறை, 16ம் தேதி அரசுக்கு அளித்தது.
கப்பன் பார்க்கில் நுழைய, பிரதான வாயிலாக பயன்படுத்தப்படும் ஹட்சன் சர்க்கிள் கேட்டில், போலீஸ் அவுட் போஸ்ட் அமைக்க வேண்டும். மற்ற நுழைவு வாசல்களில் தனியார் செக்யூரிட்டிகள் அதிக அளவில் நியமிக்க வேண்டும் என்பது போன்ற பலவித ஆலோசனைகள் அறிக்கையில் இடம் பெற்றுள்ளன.
தோட்டக்கலைத்துறை (கப்பன் பார்க்) துணை இயக்குனர் மகந்தேஷ் முர்கோட் கூறியதாவது:
தற்போது தனியார் செக்யூரிட்டிகள், 22 பேர் உள்ளனர். இந்த எண்ணிக்கையை, 40 ஆக உயர்த்தவும், போலீஸ் படையினரை மேலும் அமர்த்தவும் கோரியுள்ளோம். போலீஸ் ரோந்து வாகனமான, 'ஹொய்சாலா' இரவும், பகலும் சுற்றிக் கொண்டிருக்க வேண்டும்.'டிரோன் கேமரா' கப்பன் பார்க் வளாகத்துக்குள் அமைந்துள்ள அரசு அலுவலகங்களில், 'சிசிடிவி' கேமராக்களை பூங்காவின் எல்லைகளை பார்த்தபடி பொருத்த முன்வர வேண்டும். தற்போது, கப்பன் பார்க்கில் போலீஸ் தரப்பில் நான்கு, தோட்டக்கலைத்துறை சார்பில், ஆறு 'சிசிடிவி' கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. லால்பாக் போன்று, கப்பன் பார்க்கை சுற்றிலும் சுற்றுச்சுவர் எழுப்புவது சாத்தியமில்லை. அதேபோல், மரங்கள் அடர்த்தியாக இருப்பதால், 'டிரோன் கேமரா' மூலம் பார்க்கை கண்காணிப்பதும் இயலாது.
இது தவிர, தற்போது பார்க்கில் காலை, 8:00 மணியிலிருந்து, இரவு, 10:00 மணி வரை, வாகனங்கள் செல்ல அனுமதித்திருப்பதை, இனிமேல் காலை,

10:00 மணியிலிருந்து, இரவு, 7:00 மணி வரை என, மாற்ற வேண்டும். திட்ட அறிக்கைக்கு அரசு ஒப்புதல் அளிப்பதை பொறுத்து, பார்க்கில் பாதுகாப்பு வசதி பலப்படுத்தப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## இவ்வளவு மழை பெய்தும் இயல்பை எட்டவில்லை



சென்னை:விடாது பெய்த கனமழையால், சென்னை உட்பட, பல மாவட்டங்கள் தத்தளிக்கின்றன. இதில் இருந்து மீளும் வகையில், 'தமிழகத்தில் கன மழை குறையும். ஒரு சில இடங்களில் மட்டும் மழை பெய்யும். திருவள்ளூர் மாவட்டத்தில், கனமழை தொடரும்' என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இவ்வளவு நாட்களில், அதிக அளவில் மழை பெய்தும், வழக்கமான அளவை, தமிழகம் இன்னும் எட்டவில்லை.

### வெள்ளத்தில்...:

தமிழகத்தில், ஒரு வாரத்திற்கும் மேலாக கனமழை கொட்டித் தீர்க்கிறது. சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூார் உள்ளிட்ட வட மாவட்டங்கள், வெள்ளத்தில் தத்தளிக்கின்றன. சென்னையில், திருநீர்மலை, முடிச்சூர் உள்ளிட்ட பகுதிகளில், மக்கள் வெளியேற முடியாமல் சிக்கித் தவிக்கின்றனர்.

மணப்பாக்கம், ஐ.ஏ.எஸ்., - ஐ.பி.எஸ்., அதிகாரிகள் குடியிருப்புகளில் பலர் சிக்கி தவிக்கின்றனர். அவர்களை மீட்கும் பணியில், கடலோர காவல்படை, தேசிய பேரிடர் மீட்பு படையினர் ஈடுபட்டனர். பாதிக்கப்பட்டோருக்கு, ஹெலிகாப்டர் மூலம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்படுகின்றன.

**இந்த சூழலில், வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன், நேற்று கூறியதாவது:** வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதி, காலை, 8:30 மணி நிலவரப்படி, தெற்கு ஆந்திரா, வட தமிழகம் ஒட்டிய வங்கக்கடல் பகுதியில், காற்றழுத்த தாழ்வு பகுதியாக நீடிக்கிறது. அது மேலும், வடக்கு, வடமேற்கு திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், தமிழகம், புதுச்சேரியில், ஒரு சில இடங்களில் மட்டுமே மழை பதிவாகிஉள்ளது.அடுத்த, 24 மணி நேரத்தில், தமிழகம், புதுச்சேரியில், ஒரு சில இடங்களில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. திருவள்ளூர் மாவட்டத்தில், கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையில், ஒரு சில இடங்களில் மழை பெய்யும்.

## கடல் கொந்தளிப்பு:

வட தமிழக கடலோரங்களில், கடல் கொந்தளிப்புடன் காணப்படும் என்பதால், மீனவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தமிழகத்தில், பெரு வெள்ளம், பெரு மழைக்கு வாய்ப்பில்லை.இவ்வாறு அவர் கூறினார்.

தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதி, ஆந்திரா சென்றதால், தமிழகத்திற்கான பாதிப்பு வெகுவாக குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது. மழை குறைவதால், மீட்புப்பணிகளை தீவிரப்படுத்துவதில் அரசு கவனம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மழை விட்டாலும், மீட்புப்பணிகள் முடிந்து மக்கள் இயல்பு நிலைக்கு வர, ஒரு வாரத்திற்கு மேல் ஆகும்.

## மழை எவ்வளவு?

திருத்தணி - 9; சோழவந்தான் - 8; பள்ளிப்பட்டு, சித்தம்பட்டி, அரக்கோணம், ஸ்ரீபெரும்புதுார் - 7; காட்டுக்குப்பம், செங்கல்பட்டு - 6; பூந்தமல்லி, வாடிபட்டி - 5; சிவகங்கை, மதுரை, திருவாடனை, சென்னை விமான நிலையம், எண்ணுார்,

தாமரைப்பாக்கம் - 4 செ.மீ., மழை பதிவாகியுள்ளது. மூன்று மாதங்களில், வட கிழக்கு பருவ மழை இயல்பு அளவாக, 44 செ.மீ., பதிவாக வேண்டும். நேற்று காலை, 8:30 மணி நிலவரப்படி, 24 மணி நேரத்தில், தமிழகத்தில் சராசரி மழை அளவு, 0.5 செ.மீ., பதிவாகியுள்ளது. அக்., 28 முதல், 38.8 செ.மீ., மழை பதிவாகியுள்ளது. இன்னும், 5.2 செ.மீ., மழை வந்தால் வழக்கமான அளவை எட்டி விடும்.

**கனமழை பெய்தும்நிரம்பாத 941 ஏரிகள்**

வேலுார்: வரலாறு காணாத கனமழை பெய்தும், வேலுார் மற்றும் தி.மலை மாவட்டத்தில், இன்னமும், 941 ஏரிகள் நிரம்பவில்லை, என, கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது,வேலுார், திருவண்ணாமலை மாவட்டத்தில், அக்., 28ம் தேதி முதல் பரவலாக மழை பெய்து வருகிறது. வரலாறு காணாத அளவுக்கு மழை கொட்டியது. இதனால், பெரும்பாலான நீர் நிலைகள் நிரம்பின.வேலுார் மாவட்டத்திலுள்ள, 519 ஏரிகளில், 110 ஏரிகள் மட்டுமே முழுமையாக நிரம்பியது. 50க்கும் மேற்பட்ட ஏரிகள், 75 சதவீதத்திற்கும் மேல் நிரம்பின; இந்த ஏரிகள் விரைவில் நிரம்ப வாய்ப்பு உள்ளது. 359 ஏரிகளுக்கு தண்ணீர் வரத்து குறைவாகவே உள்ளது.திருவண்ணாமலை மாவட்டத்தில், பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள, 600 ஏரிகளில், 68 ஏரிகள் மட்டுமே முழுமையாக நிரம்பியிருக்கிறது. 47 ஏரிகள் 75 சதவீதமும், 140 ஏரிகள் 50 சதவீதமும் நிரம்பியிருக்கிறது. மீதமுள்ள, 345 ஏரிகள், 50 சதவீதத்துக்கு குறைவாகவே நிரம்பியிருக்கிறது.ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டும், ஏரிகள் நிரம்பாதது கேள்விக் குறியாகவே உள்ளது.

**மல்லிகை ரூ.1000**

திண்டுக்கல்,:திண்டுக்கல் பூ மார்க்கெட்டில் நேற்று ஒரு கிலோ மல்லிகை ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது. இதேபோல் கனகாம்பரம் பூவும் அதிக விலைக்கு விற்பனையானது.திண்டுக்கல் மாவட்டத்தில் 221 எக்டேரில் மல்லிகை சாகுபடி செய்யப்படுகிறது. பனிப்பொழிவால் பூக்களின் வரத்தும் குறைந்து விட்டது. தொடர்ந்து முகூர்த்த நாள்கள் வருவதால் நேற்று மல்லிகையின் விலை கிலோ ரூ.1000, முல்லை ரூ.700, கனகாம்பரம் ரூ.500,

காக்கரட்டான் ரூ.400, அரளி ரூ.120, சம்பங்கி ரூ.140, ரோஜா ரூ.80, செண்டுமல்லி ரூ.60க்கு விற்பனையானது.பூ மார்க்கெட் சங்க நிர்வாகி சகாயம் கூறுகையில்,“நடப்பாண்டில் கார்த்திகையில் கடும் பனி நீடிப்பதால் பூக்கள் வரத்து குறைந்து விலை அதிகரித்துஉள்ளது ”, என்றார்.

## ஆரோக்கியப்பச்சை மூலிகை ஆய்வில் உயிரியியல் மாணவி: காந்திகிராம பல்கலை ஏற்பாடு



காந்திகிராமம்,: ஆரோக்கிய பச்சை மூலிகையில் உள்ள வேதிப்பொருட்கள் குறித்த ஆய்வில், காந்திகிராம பல்கலையின் உயிரியியல்துறை மாணவி சசிகலா ஈடுபட்டுள்ளார்.சீனர்களிடையே 'ஜின் செங்' எனப்படும் பாரம்பரிய மருத்துவ மூலிகை பிரபலம். உடல் ஆரோக்கியம், ஆயுட்காலத்தை அதிகரிக்கும் வேதிப்பொருட்கள் அதில் உள்ளன. அதன் வேர்கள் மூலம் சீன மருத்துவர்கள் பல்வேறு நோய்களுக்கு தீர்வு கண்டனர்.மருத்துவ குணமுள்ள ஆரோக்கிய பச்சை மூலிகை மேற்கு மலைத் தொடரில் மட்டுமே உள்ளதை தாவரவியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். இம்மூலிகையின் வேதிப்பொருட்கள் குறித்த ஆய்வில் காந்திகிராம பல்கலை உயிரியல்துறை மாணவி சசிகலா ஈடுபட்டுள்ளார்.அவர் கூறியதாவது: 1788ல் அகஸ்தியர் மலைக்காடுகளில் இவ்வகை மூலிகை இருந்தது. இதன் தாவரவியல் பெயர் 'டிரைகோபஸ் ஜைலானிக்கஸ்'. பூமிக்குள் நீளமான தண்டினை கொண்டிருக்கும். வெற்றிலைக் கிழங்கு குடும்பத்தை சார்ந்தது. மலேசியா, சிங்கப்பூர், இலங்கை,

தாய்லாந்து நாடுகளிலும் இருந்தாலும், அதிக மருத்துவ குணமுள்ள 'டிராவன்கோரிகஸ்' என்னும் ஆரோக்கிய பச்சை மூலிகை மேற்கு மலைத் தொடரில் அகஸ்தியர்(பொதிகை) மலைக்காடுகளில் மட்டுமே வளர்கிறது. இதன் பயன்பாடு 1987 வரை வெளியுலகிற்கு தெரியவில்லை.ஆராய்ச்சியாளர்கள், காணி பழங்குடிகளுக்கு ஏற்பட்ட தொடர்பால் இதன் பயன் வெளியுலகிற்கு தெரிந்தது. இம்மூலிகையின் (பாதி பழுத்த) பழத்தை உண்பதன் மூலம் சக்தியுடன், உணவே இல்லாமல் ஆராக்கியத்துடன் வாழ முடியும் என்பதை ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்துள்ளனர். அதனால், காந்தி கிராம பல் கலையில் அந்த மூலிகை, மற்றும் பழங்களில் உள்ள வேதிப்பொருள்கள் குறித்த ஆய்வில் ஈடுபட்டு உள்ளோம், என்றார்.

## தக்காளியின் விலை ரூ.100 தாண்டியது

சென்னை : தமிழகத்தில் பெய்து வரும் பலத்த மழையின் காரணமாக, தக்காளியின் விலை சென்னையில் அதிரடியாக அதிகரித்துள்ளது. மழைக்கு முன்பு ரூ. 5க்கு விற்ற தக்காளி, வரத்து குறைவின் காரணமாக ரூ.100 முதல் ரூ.130 வரை விற்கப்படுகிறது.

## ஆரணி ஆற்று வெள்ளம்: 500 ஏக்கர் விவசாய நிலம் மூழ்கின

கும்மிடிப்பூண்டி : ஆரணி ஆற்றின் மதகு வழியாக வெளியேறிய வெள்ளம், ஆர்.என்.கண்டிகை கிராமம் முழுவதும் சூழ்ந்து கொண்டது. இதனால், 500 ஏக்கர் விவசாய நிலங்கள் மூழ்கின.

கவரைப்பேட்டை அருகே, ஏ.என்.குப்பம் கிராமத்தில், ஆரணி ஆற்றில் குறுக்கே அணைக்கட்டு ஒன்று உள்ளது. தொடர்ந்து பெய்து வரும், கனமழை யால், ஆர்.என்.கண்டிகை கிராம விவசாய நிலங்களில் இருந்து தண்ணீர் வடிந்து, ஆரணி ஆற்றில் கலக்கும் விதமாக, அணைக்கட்டு அருகேயுள்ள கரையோர மதகு ஒன்றின் ஷட்டர் லேசாக திறக்கப்பட்டிருந்தது.நேற்று முன்தினம் இரவு, எதிர்பாராத விதமாக ஆரணி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால், திறக்கப்பட்டிருந்த மதகு வழியாக, ஆற்று வெள்ளம் வெளியேறி,

ஆர்.என்.கண்டிகை கிராமத்தை சூழ்ந்து கொண்டது.இதனால், நெற்பயிர், கத்திரி, வெண்டை, மல்லி, முல்லை, ரோஜா உள்ளிட்ட, 500 ஏக்கர் பரப்பளவு விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கின. இதனால், ஆர்.என்.கண்டிகை கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் அனைவரும் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர். மேலும் ஏ.என்.குப்பம் - ஆர்.என்.கண்டிகை கிராமத்தை இணைக்கும் சாலையில், 5 அடி உயரத்திற்கு ஆற்று வெள்ளம் சூழ்ந்துள்ளதால், கிராமவாசிகள் பெரிதும் சிரமப்பட்டு வருகின்றனர்.

### கேசாவரம் அணைக்கட்டில் வெள்ளம்

கடம்பத்துார் : பேரம்பாக்கம் அடுத்த, கேசாவரம் அணைக்கட்டில், 10 ஆண்டுகளுக்கு பின், மழைநீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடுகிறது.

வேலுார் மாவட்டத்தில், தக்கோலம் வழியாக வரும் கல்லாறு, திருவள்ளூர் மாவட்டம் பேரம்பாக்கம் கேசாவரம் அணைக்கட்டு பகுதியில் கூவம் ஆறு, கொசஸ்தலை ஆறு என, இரு ஆறுகளாக பிரிகிறது. கேசாவரம் அணைக்கட்டில் நீர் நிரம்பினால், நேரடியாக கொசஸ்தலை ஆற்றில், செல்லும் நீர், பூண்டி ஏரிக்கு செல்கிறது.இந்த அணைக்கட்டின் இன்னொரு புறம் அமைக்கப்பட்ட, 16 ஷட்டர்கள் வழியாக செல்லும் மழைநீர்,கூவம் ஆறாக மாறி, பேரம்பாககம், மணவாளநகர், அரண்வாயல், புதுச்சத்திரம் வழியாக சென்னைக்கு செல்கிறது. இந்த அணைக்கட்டில், 10 ஆண்டுகளுக்கு பிறகு மழைநீர் வெள்ளமாக பாய்ந்து வருவதால், இப்பகுதியைச் சேர்ந்தவர்கள் ஏராளமானோர் அணைக்கட்டை பார்வையிட்டு, ஆனந்த நீராடி செல்கின்றனர்.

### மரக்காணம் பகுதி கிராமங்களில் வேளாண்துறை அதிகாரி ஆய்வு

மரக்காணம்:மரக்காணம் பகுதியில் பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட பயிர்களை, வேளாண்துறை உதவி இயக்குநர் ஆய்வு செய்தார்.

மரக்காணம் ஒன்றியம், பக்கிங்காம் ஏரி கரை ஓரத்தில் உள்ள கிராம பகுதிகளில், 5 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில், விவசாயிகள் நெல் பயிர்கள் சாகுபடி செய்திருந்தனர். சமீபத்தில் தொடர்ந்து பெய்த கன மழையால் பக்கிங்காம் ஏரி நிரம்பி, கரையோரம் உள்ள கீழ்புத்துப்பட்டு, கூனிமேடு,

செட்டிக்குப்பம், காளியாங்குப்பம், அனுமந்தை, செய்யாங்குப்பம், கீழ்பேட்டை, பனிச்சமேடு ஆகிய கிராமங்களில் பயிரிப்பட்டிருந்த 500 ஏக்கர் நெல்பயிர்கள் தண்ணீரில் மூழ்கின. இப்பகுதிகளை திண்டிவனம் வேளாண்துறை உதவிஇயக்குநர் கென்னடிஜெயக்குமார், ஆய்வு செய்தார். வேளாண்மை அலுவலர் எத்திராஜ், உதவிஅலுவலர் மோகன்குமார், ருவாய்ஆய்வாளர் பாஸ்கரன், வி.ஏ.ஓ., ராஜலட்சுமி உடன் இருந்தனர்.

## ஓமலூரில் வறண்டு கிடக்கும் ஏரிகள்: தண்ணீருக்கு ஏங்கும் விவசாயிகள்

ஓமலூர்: ஓமலூர் சுற்று வட்டாரத்தில் அதிக மழை பெய்தும், பல ஏரிகள் வறண்ட நிலையில் உள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

ஏற்காடு சேர்வராயன் மலைப்பகுதியில், பெய்த பலத்த மழையால் அடிவாரத்தில் ஆரம்பிக்கும் சரபங்கா ஆற்றில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடியது. ஓமலூர் ஊராட்சி மற்றும் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டின் கீழ், 125 ஏரிகள் உள்ளது. காடையாம்பட்டி வட்டாரத்தில் உள்ள சிறிய ஏரிகள் ஒரு சில நிரம்பிய நிலையில், பெரிய ஏரிகளுக்கு தண்ணீர் வந்து கொண்டுள்ளது. டேனிஷ்பேட்டை ஏரி, செட்டிப்பட்டி ஏரி, பண்ணப்பட்டி ஏரி, காமலாபுரம் பெரிய ஏரி, சின்ன ஏரி, கோட்டமேட்டுப்பட்டி பூலா ஏரி ஆகியவை நிரம்பியது. ஏற்காடு வனப்பகுதியில் அதிகப்படியாக, 35 மில்லி மீட்டருக்கு மேல் மழை பெய்த நிலையில், ஓமலூர் வட்டாரத்தில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட ஏரிகளுக்கு தண்ணீர் வரவில்லை. நீர் நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்பு, தூர்வாரப்படாத கால்வாய்கள், வழித்தடங்களை விவசாய நிலமாக மாற்றியமைத்தல், முறையாக பராமரிப்பு இல்லாத காரணங்களால் ஏரிகளுக்கு, ஒரு சொட்டு தண்ணீர் கூட வராமல் வறண்ட நிலையில் உள்ளன. தும்பிபாடி பஞ்சாயத்தில் உள்ள முள்ளிசெட்டிப்பட்டி ஏரி, நாகலூர் ஏரி, பொட்டிபுரம் ஏரி, எம்.செட்டிப்பட்டி ஏரி, பெரியேரிப்பட்டி ஏரி, பச்சனம்பட்டி ஏரி, செல்லப்பிள்ளை குட்டை ஏரி, முத்துநாயக்கன்பட்டி ஏரி, செம்மண்கூடல் ஏரி உள்ளிட்ட ஏரிகளில் தண்ணீர் இன்றி வறண்டு கிடக்கிறது. இதனால், அப்பகுதியில் உள்ள பொதுமக்கள், விவசாயிகள் தண்ணீர் இன்றி வறட்சியில்

வாழ்கின்றனர். நிலத்தடி நீர்மட்டம் குறைந்து இருப்பதால் விவசாயத்துக்கும், குடிநீருக்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

பொட்டிபுரம் ஊராட்சி தலைவர் ராகவன் கூறியதாவது: கடந்த 20 ஆண்டுகளாக பொட்டிபுரம் ஏரிக்கு தண்ணீர் வரவில்லை. இது குறித்து அதிகாரிகளுக்கு புகார் அளித்தும் நடவடிக்கை இல்லை. தற்போது மழை பெய்த போதும், தண்ணீர் இன்றி ஏரி வறண்டு கிடக்கிறது. அதிகாரிகள் வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மட்டும் பார்வையிட சென்றனர். வறண்ட ஏரிகள் குறித்து யாரும் கவலை கொள்ளவில்லை. எனவே, மழைக்காலங்களில் தண்ணீரை ஏரிகளுக்கு கொண்டு செல்ல, வறண்ட ஏரிகளை மாவட்ட நிர்வாகம் கணக்கெடுத்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## உளுந்தம், பாசி பருப்பு விலை குவிண்டாலுக்கு ரூ. 500 சரிவு

சேலம்: தமிழகத்தில் உளுந்தம், பாசி பருப்புகளின் விலை, மூன்று மாதத்துக்கு பின் முதல் முறையாக நேற்று குவிண்டாலுக்கு, 500 ரூபாய் சரிந்துள்ளது. நடப்பாண்டு ஜனவரி மாதத்தில், துவரம் பருப்பு, பாசி பருப்பு, உளுந்தம் பருப்பு ஆகியன, கிலோ, 110 முதல், 120 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. கடந்த, 11 மாதத்தில் படிப்படியாக விலை உயர்வை சந்தித்து, துவரை வரலாறு காணாத விலை உயர்வாக கிலோ, 210 ரூபாய்க்கும், உளுந்து, 180, பாசி பருப்பு, 135 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில், நேற்று, யாரும் எதிர்பார்க்காத வகையில், உளுந்து, பாசி பருப்புக்களின் விலையில், குவிண்டாலுக்கு, 500 ரூபாய் சரிவு ஏற்பட்டது. விலை சரிவு விவரம்:

சேலம் பருப்பு வியாபாரி குமரேசன் கூறியதாவது: வடமாநில பருப்பு பதுக்கலை தடுக்க, அரசு அதிரடி ரெய்டு நடத்தியது. இந்நிலையில், அங்கிருந்து தமிழகத்துக்கு முதல் கட்டமாக உளுந்து மற்றும், பாசிப் பருப்பு வரத்துவங்கி உள்ளது. வெளிநாடுகளில் இருந்து, கொள்முதல் செய்யப்பட்ட பருப்பும் விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுவதால், பருப்பு விலையில், குவிண்டாலுக்கு, 500 ரூபாய் வரை, பெரிய வியாபாரிகள் விலை குறைப்பு

செய்துள்ளனர். இந்த சரிவை தொடர்ந்து, துவரம் பருப்பு விலையிலும் சரிவு ஏற்படும் என, எதிர்பார்க்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

அரசு பருப்பு வருகையால் சரிவா? தமிழக அரசு, பருப்பு விலையை கட்டுப்படுத்தும் நோக்கில், நவ.,1 முதல் கிலோ, 110 ரூபாய்க்கு, பருப்பு விற்பனையை துவக்கியது. இதன் வருகையால், துவரம் பருப்பு விலையில் சரிவு ஏற்படும் என, எதிர்பார்க்கப்பட்ட நிலையில், உளுந்தம் பருப்பு, பாசி பருப்பு விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. அரசின் துவரம் பருப்பு, முழு வீச்சில் விற்பனைக்கு வரும் நிலையில், துவரம் பருப்பு விலையிலும் சரிவு ஏற்படும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**கடலூரில் புயல் தாக்கம் எதிரொலி:முந்திரி குவிண்டாலுக்கு ரூ.3,000 உயர்வு**

சேலம்: கடலூரில், புயல் தாக்கத்தின் காரணமாக, முந்திரி தோட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால், நேற்று ஒரே நாளில் முந்திரி பருப்பு விலையில் குவிண்டாலுக்கு, 3,000 ரூபாய் உயர்வு ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தின் முந்திரி பருப்பு தேவையில், 70 சதவீதத்தை கடலூர் மாவட்டத்தின் பண்ருட்டி, காட்டுமன்னார்கோவில் பகுதிகளே பூர்த்தி செய்கின்றன. மீதமுள்ள, 30 சதவீத முந்திரி, கேரளா, இலங்கையில் இருந்து விற்பனைக்கு வருகிறது. நவ.,6ல் கடலூர் மாவட்டத்தை புயல் தாக்கியதால், அங்கு விவசாய நிலங்கள், முந்திரி தோட்டங்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகின. தற்போது, மீட்பு பணி முழு வீச்சில் நடந்து வந்த போதிலும், நிலைமை சரியாக இன்னும் சில மாதங்கள் பிடிக்கும். இதையடுத்து, முந்திரி பருப்பின் பதுக்கல் அதிகரித்ததால், மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வரும் முந்திரியின் வரத்தில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. நேற்று மதியம் முந்திரி பருப்பின் விலையில், குவிண்டாலுக்கு 3,000 ரூபாய் வரை திடீர் உயர்வு ஏற்பட்டது. நேற்று முன்தினம் முதல் ரகம் குவிண்டால், 65,400 ரூபாய்க்கு விற்றது, நேற்று 68,200 ரூபாய்க்கும், இரண்டாம் தரம் 58,900 ரூபாய்க்கு விற்றது, 61,800 ரூபாய்க்கும், மூன்றாம் தரம் 56,900 ரூபாய்க்கு விற்றது, 60,120 ரூபாய்க்கு விற்கிறது.

சேலம், செவ்வாய்ப்பேட்டையை சேர்ந்த முந்திரி மொத்த வியாபாரி குமார்

கூறியதாவது: தமிழகத்தில் முந்திரி விளைச்சலுக்கு பெயர் பெற்ற, கடலூர் மாவட்டம் புயலின் தாக்குதலுக்கு உள்ளானதால், முந்திரி பயிர்களில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நிலைமை சரியாக இன்னும் சில மாதங்கள் பிடிக்கும். அதே நேரத்தில், பொங்கல் பண்டிகை நெருங்கி வருவதால், முந்திரி பருப்பின் தேவை அதிகரிக்கும் எனக் கருதிய மொத்த வியாபாரிகள், முந்திரி பருப்பை பதுக்கி வருகின்றனர். இதன் காரணமாக, முந்திரி பருப்பின் விலையில், ஒரே நாளில் குவிண்டாலுக்கு 3,000 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. இந்த உயர்வு மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. பாயாசம், சர்க்கரை பொங்கல் ஆகியவற்றில், அள்ளி போட்ட முந்திரியை இனி கிள்ளி போட வேண்டிய நிலைக்கு பெண்கள் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

## ஏரி, குளம் நிரம்பியது: விவசாயிகள் மகிழ்ச்சி

வெண்ணந்தூர்: வெண்ணந்தூர் பகுதியில் உள்ள ஏரிகள், குளம், குட்டைகள் நிரம்பியதால், அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ராசிபுரம் அடுத்த, வெண்ணந்தூர் பகுதியில், சோமூர் ஏரி, 360 ஏக்கர் பரப்பளவு கொண்டது. ஆண்டுதோறும் பெய்யும் மழையால் இந்த ஏரிக்கு அளவிற்கு மேல் மழைநீர் வருவது வழக்கம். தற்போது பெய்த மழையால், ஏரியில் முழு கொள்ளளவையும் ஈட்டி நிரம்பி உபரி நீர் வழிந்தோடுகிறது. இதனால், அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து நெல் மற்றும் கரும்பு பயிர்களை பயிரிட்டு வருகிறார்கள். ஏரியின் கொள்ளளவிற்கு ஏற்ப அந்த பகுதியில், 300க்கும் மேற்பட்ட ஏக்கரில் பாசன விவசாயம் தொடர்ந்து நடைபெறும். இங்கிருந்து வெளியேறும் நீர் ராமபுரம், பருத்திப்பள்ளி பகுதிகளில் உள்ள ஏரி, குளம், குட்டைகளில் தேங்கி வருகிறது. இதேபோல், அக்கரைப்பட்டி ஏரி, மதியம்பட்டி ஏரியும், நிரம்பியுள்ளது. இந்த ஏரிகளுக்கும், சோமூர் ஏரிக்கும் திருமணிமுத்தாற்று பகுதிகளில் இருந்தும் வரும் நீரினால், இந்த இரண்டு ஏரியும் நிரம்பி வருதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## கால்நடை பாதுகாப்பு திட்ட மருத்துவ முகாம்

குமாரபாளையம்: குமாரபாளையம் அடுத்த கல்லங்காட்டுவலசு பகுதியில், கால்நடைகளுக்கு தொற்றுநோய் பரவாதிருக்க சிறப்பு மருத்துவ முகாம்

நடந்தது. குமாரபாளையம் அடுத்த, தட்டான்குட்டை, வேமன்காட்டுவலசு, கல்லங்காட்டுவலசு, வீ.மேட்டூர், வீரப்பம்பாளையம், குப்பாண்டபாளையம், குள்ளநாயக்கன்பாளையம், சவுதாபுரம், பல்லக்காபாளையம், சத்யா நகர், அருவங்காடு உள்ளிட்ட பகுதிகளில், கடந்த ஒரு வார காலத்திற்கும் மேலாக, கன மழை பெய்து வருகிறது. இதனால் கால்நடைகளுக்கு கோமாரி நோய் உள்ளிட்ட பல்வேறு தொற்றுநோய் பரவும் அபாயம் உள்ளது. அதையடுத்து, கால்நடைகளுக்கு சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்திட விவசாயிகள் கோரிக்கை விடுத்திருந்தனர். இந்நிலையில், நேற்று, கல்லங்காட்டுவலசு பகுதியில், சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. முகாமில் மண்டல இணை இயக்குனர் சக்திவேல் தலைமை வகித்தார். இதில், செயற்கைமுறை கருவூட்டல், ஆண்மை நீக்கம் செய்தல், கோழி மற்றும் ஆடுகளுக்கு தடுப்பூசி போடுதல், சினை பரிசோதனை, மலடு நீக்கம், குடற்புழு நீக்கம் செய்தல், தீவன பெருக்கம் பற்றி விளக்கம் அளித்தல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன. சிறந்த முறையில் வளர்க்கப்பட்ட, நான்கு பசுமாடு கன்றுகளின் உரிமையாளர்களுக்கு பரிசு வழங்கப்பட்டன.

## அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரிப்பு

தர்மபுரி: தொடர் மழையால், தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அணைகளுக்கு தண்ணீர் வரத்து தொடர்கிறது. அதிகபட்சமாக, ஈச்சம்பாடி அணையில் இருந்து, வினாடிக்கு, 1,352 கனஅடி உபரி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

2 அணைகள் நிரம்பின: தர்மபுரி மாவட்டத்தில் கடந்த, 9ம் தேதி முதல் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதனால் மாவட்டத்தில் உள்ள தும்பலஹள்ளி அணையை தவிர, மற்ற, 7 அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்தது. வரட்டாறு, ஈச்சம்பாடி அணைகள் முழு கொள்ளவை எட்டிய நிலையில், மற்ற, ஐந்து அணைகளுக்கும் தண்ணீர் வரத்து தொடர்ந்து வருகிறது.

உபரி நீர் வெளியேற்றம்: நேற்று மதியம், 12 மணி நிலவரப்படி, 17.35 அடி உயரம் கொண்ட ஈச்சம்பாடி அணையில் தண்ணீர் முழு கொள்ளளவை எட்டியுள்ளது. அணைக்கு வினாடிக்கு, 1,352 கன அடி தண்ணீர் வந்து

கொண்டிருந்து. இது அணையில் இருந்து அப்படியே திறந்து விடப்பட்டது. இதேபோல், 34.45 அடி கொண்ட வரட்டாறு அணை, முழு கொள்ளவை எட்டியதால், அணைக்கு வந்து, 78 கன அடி நீர் அப்படியே திறந்து விடப்பட்டது. 65.27 அடி உயரம் கொண்ட வாணியாறு அணையில், 64.29 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு, 369 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையின் பாதுகாப்பு கருதி, அணைக்கு வந்து கொண்டிருந்த, 369 கன அடி தண்ணீரும் அப்படியே திறந்து விடப்பட்டது.

தொடர்ந்து வரத்து அதிகரிப்பு: 50 அடி உயரம் கொண்ட பஞ்சப்பள்ளி சின்னாறு அணையில், 48.95 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு, 140 கனஅடி தண்ணீர் வருகிறது. இதில், 100 கனஅடி நீர், திறந்து விடப்பட்டுள்ளது. 50.18 அடி உயரம் கொண்ட தொப்பையாறு அணையில், 42.95 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு, வினாடிக்கு, 44 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. 24.60 அடி உயரம் கொண்ட நாகாவதி அணையில், 14.01 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு, 55 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. 25.20 அடிஉயரம் கொண்ட கேசர் குழி அணையில், 24.21 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு, 31.45 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. மாவட்டத்தில் உள்ள, ஏழு அணைகளில், இரு அணைகள் முழு கொள்ளவை எட்டியுள்ளன. தொடர்ந்து, ஏழு அணைகளுக்கும் தண்ணீர் வரத்து உள்ளதால், இந்த அணைகளை நம்பியுள்ள பாசன விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## திருச்சியில் 41,040 ஹெக்டரில் சம்பா நெல் நடவுப்பணி நிறைவு

திருச்சி: திருச்சி மாவட்டத்தில் இதுவரை, 41,040 ஹெக்டரில் சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டத்துக்குட்பட்ட டெல்டா பகுதியில், இந்த ஆண்டு, 34,900 ஹெக்டரிலும், மற்ற பகுதிகளில், 25,000 ஹெக்டரிலும் சம்பா நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை, டெல்டா பகுதியில், 31,700 ஹெக்டரிலும், மற்ற பகுதிகளில், 9,340 ஹெக்டரிலும் சம்பா நெல் நடவுப்பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, மாவட்டத்தில், இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு,

பின்னேற்பு மானியம் வழங்க, 8,500 ஹெக்டருக்கு இலக்கீடு பெறப்பட்டு, 6,430 ஹெக்டரில் இயந்திர நடவுப்பணி முடிந்துள்ளது.

**முருங்கைக்காய், இலை உற்பத்திக்கு மானியம்**

திண்டுக்கல்: தேசிய தோட்டக்கலை துறை இயக்க திட்டத்தில் முருங்கைக்காய் மற்றும் முருங்கை இலை உற்பத்திக்கு மானியம் வழங்கப்படுகிறது. திண்டுக்கல்லில் முருங்கைக்காய் மற்றும் இலை உற்பத்திக்கு 75 சதவீதம் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஒரு எக்டேர் முருங்கை காய் உற்பத்திக்கு மானியமாக ரூ.62,500க்கு இடு பொருளாக உரம், பூச்சி மருந்து, விதைகள் வழங்கப்படும். மே<லும், முருங்கை இலை உற்பத்திக்கு இடு பொருள், விதைகள் மற்றும் மானியமாக ரூ, 1 லட்சமும், அதில் நிலம் தயார்படுத்த, தனியே விவசாயிகள் வங்கி கணக்கில் ஒரு பகுதியும் செலுத்தப்படும். தோட்டக்கலை துறை துணை இயக்குனர் ராமநாதன் கூறுகையில்,""விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியத்தின் மூலம் முருங்கை காய் மற்றும் இலையின் உற்பத்தியை பெருக்கலாம். மானியம் பெற விவசாயிகள் கம்ப்யூட்டர் சிட்டா, அடங்கல், ரேஷன் கார்டு, புகைப்படத்தை வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்' என்றார்.

**விவசாய மாணவர் செய்முறை பயிற்சி**

திண்டுக்கல்:ஒட்டன்சத்திரம் அருகே இடைய கோட்டையில் பஞ்சகாவ்ய கரைசல் தயாரிப்பது, உயிர்உரம் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்வது குறித்து விவசாயிகளுக்கு செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. பொள்ளாச்சி வானவராயர் வேளாண்மை கல்லூரி இறுதி ஆண்டு மாணவர்கள் விளக்கினர்.பால், தயிர், நெய், சாணம், கோமியம் ஆகியவற்றை கொண்டு தயாரிப்பதால் அவை பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாது. பயிர்களை தாக்கும் பூச்சிகள் கட்டுப்படுத்தப்படுகிறது. விதை நேர்த்தியால் முளைப்பு திறன் கூடுகிறது என எடுத்துரைத்தனர்.இதேபோல தேனி குள்ளப்புரம் வேளாண் தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள் கிராமத் தங்கல் திட்டத்தில் விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிப்பு குறித்து பயிற்சி அளித்தனர். மேலும் இவர்கள் சின்னாளப்பட்டியில் முகாமிட்டு, மொபைல் போன் மூலம் ஆத்தூர்

வட்டார விவசாயிகளுக்கு, இயற்கை வேளாண்மை, உரபரிந்துரை குறித்து குறுந்தகவல்களை அனுப்பினர் என, உதவி பேராசிரியர் மணிமாறன் தெரிவித்தார்.

**நிரம்பிய சோத்துப்பாறை அணை 16 நாட்களுக்கு பிறகு இன்று திறப்பு**

பெரியகுளம்,: பெரியகுளம் அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள சோத்துப்பாறை அணையின் மொத்த உயரம் 126 அடி. இப்பகுதியில் பெய்து வரும் மழையால் கடந்த அக்.,14 ல் அணையின் நீர்மட்டம் 100அடியை தொட்டது. நவ.,2 முதல் அணை நிரம்பி மறுகால் பாய்ந்து வருகிறது. அதன்பிறகு 16 நாட்கள் கழித்து சோத்துப்பாறை அணை இன்று திறக்கப்படுவதாக பொதுப்பணித்துறையினர் தெரிவித்துள்ளனர். இதன்மூலம் ஆயக்கட்டு பகுதிகளான பெரியகுளம் கண்மாய், தாமரைக்குளம் கண்மாய், பாப்பிபட்டி கண்மாய் மற்றும் மேல்மங்கலம் பகுதிகளில் உள்ள 1,892 ஏக்கர் பரப்பு விவசாய நிலங்களும், நூற்றுக்கணக்கான ஏக்கர் மறைமுகமான விவசாய நிலங்களும் பயன்பெறும். புதிய ஆயக்கட்டு பகுதிகளான லட்சுமிபுரம் பகுதிகளில் உள்ள 1,0 40 ஏக்கர் பரப்பளவில் விவசாய நிலங்களும் பன்றுபெறும்.

**"இன்னும்... இன்னும் எதிர்பார்க்கிறோம்': மழைக்கு ஏங்கும் ஆண்டிபட்டி விவசாயிகள்**

ஆண்டிபட்டி: ஆண்டிபட்டி பகுதியில் உள்ள கண்மாய்களுக்கு நீர் வரத்து ஏற்படாததால், விவசாயிகள் இன்னும் அதிக மழையை எதிர்பார்த்து உள்ளனர். ஆண்டிபட்டி ஒன்றியத்தில் 5,000 க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களில் மானாவாரி சாகுபடியும், 7,000 க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களில் இறவை பாசன சாகுபடியும் நடந்து வருகிறது. இப்பகுதியில் நீர் ஆதாரம் 20க்கும் மேற்பட்ட கண்மாய்கள், குளங்களை நம்பியே உள்ளது. இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை குறைந்ததால், நீர்நிலைகளில் தண்ணீர் தேங்கவில்லை. இதனால் ஏமாற்றமடைந்த விவசாயிகள், தற்போது பெய்யும் வடகிழக்கு பருவமழை நம்பி, மானாவாரி நிலங்களில் சிறுதானியம், பயறு

வகைகள், எண்ணெய் வித்துக்கள் சாகுபடியில் இறங்கி உள்ளனர். இந்நிலையில், வடகிழக்கு பருவமழையும் எதிர்பார்த்த அளவிற்கு இன்னும் பெய்யவில்லை. இதனால், ஆண்டிபட்டி பகுதியில் உள்ள கோத்தலூத்து அதிகாரி கண்மாய், பிச்சம்பட்டி கண்மாய், கொத்தப்பட்டி புல்வெட்டி கண்மாய், ஏத்தக்கோயில் கண்மாய், போடிதாசன்பட்டி கண்மாய், ஜி.உசிலம்பட்டி, தெப்பம்பட்டி, ஆசாரிபட்டி கண்மாய்கள், பாலசமுத்திரம் கண்மாய், ரெங்க சமுத்திரம் கிலிச்சியம்மன் கண்மாய், ஜம்புலிபுத்தூர் கண்மாய் ஆகியவை காய்ந்து கிடக்கின்றன. தற்போது பெய்து வரும் சாரல்மழை மானாவாரி விவசாயிகளுக்கு ஓரளவுக்கு நம்பிக்கை தந்தாலும், இறவை பாசன விவசாயிகளுக்கு ஏமாற்றத்தையே தந்துள்ளது.

**சீலையம்பட்டி மார்க்கெட்டில்பூக்கள் விலையில் திடீர் சரிவு**

சின்னமனூர்,: சபரிமலை சீசன் துவங்கிய நிலையில் பூக்கள் வரத்து அதிகரித்துள்ளதால் சீலையம்பட்டி பூ மார்க்கெட்டில் விலை சரிந்துள்ளது. சின்னமனூரை சுற்றியுள்ள சீலையம்பட்டி, வேப்பம்பட்டி, அய்யம்பட்டி, பல்லவராயன்பட்டி பகுதியில் ஆயிரம் ஏக்கருக்கும் மேல் பூக்கள் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது கோழி கொண்டை, மல்லிகை, செண்டு பூ, சம்பங்கி, செவ்வந்தி ஆகிய பூக்களின் எடுப்பு சீசன் மும்முரமாக உள்ளது. தொடர் முகூர்த்தம் காரணமாக கடந்த சில நாட்களாக பூக்களின் விலை ஏறுமுகத்தில் இருந்தது.இந்நிலையில், பரவலாக பெய்து வரும் மழையால் பூக்கள் உற்பத்தி அதிகரித்துள்ளது. இதனால், சீலையம்பட்டி பூ மார்க்கெட்டிற்கு நேற்று வரத்து அதிகரித்து விலையில் ரூ.20 வரை சரிவு ஏற்பட்டது.

பூ கமிஷன் கடை உரிமையாளர் எம்.குமார் கூறுகையில், ""சபரிமலையில் மண்டல பூஜை துவங்கியுள்ளதால் கேரளாவிற்கு அதிகமான பூக்கள் அனுப்பப்படுகிறது. தேவையை விட வரத்து அதிகமாக இருப்பதால் விலை குறைந்துள்ளது. தொடர்ந்து மழை பெய்வதால், பூ செடிகளில் உள்ள மொட்டுகள் அழுகிவிட வாய்ப்புள்ளதால் அடுத்த வாரங்களில் வரத்து குறைய வாய்ப்புள்ளது,"என்றார்.

**மாவட்டத்தில் மழை**

ராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடனையை தவிர்த்து மற்ற பகுதிகளில் 2 நாட்களாக மழை இல்லை. நேற்று காலை 8 மணி வரை மழையளவு (மி.மீ.,): ராமநாதபுரம் 1.08, திருவாடானை 41, தொண்டி 1.02, மண்டபம் 1, ஆர்.எஸ்.மங்கலம் 3.04, கடலாடி 7.02, மொத்தம் 54.16.

**ராமநாதபுரத்தில் பயிர்களுக்கு இயற்கை உரமாகும் கடல்புற்கள்**

ராமநாதபுரம்,:ராமநாதபுரம் மாவட்டத்தில் பயிர்களுக்கு இயற்கை உரமாக கடல்புற்கள் பயன்படுகின்றன.கடல்புற்கள் மன்னார் வளைகுடா, பாக்ஜலசந்தியில் கடல் ஆழமற்ற பகுதி, நதி முகத்துவாரங்களில் அதிகளவில் காணப்படுகின்றன. இவை கரையில் இருந்து 15 மீ., ஆழம் வரை காணப்படும். 2 முதல் 2.5 மீ., உயரத்திற்கு அடர்த்தியாக வளரும். கடற்பசு, கடல் ஆமை போன்றவைக்கு உணவாக பயன் படுகிறது. சிலவகை மீன்கள், கடல் குதிரைகள், இறால்கள் முட்டை யிடவும், குஞ்சுகள் வளரவும் கடல்புற்கள் பயன்படுகின்றன.

கடல்புற்களுக்கு பலமான தண்டு பகுதி இல்லை. இதனால் பலமாக காற்று வீசும்போது, அலைகளோடு கரை பகுதியில் ஒதுங்கும். இவற்றை விவசாயிகள் சமீபகாலமாக பயிர் களுக்கு பசுந்தாள் மற்றும் இயற்கை உரமாக பயன்படுத்துகின்றனர்.

வடகிழக்கு பருவமழை துவங்கி யுள்ள நிலையில் தற்போது கடல் பகுதியில் காற்று அதிகமாக வீசுகிறது. இதனால் ஏராளமான கடற்புற்கள் கரைகளில் ஒதுங்குகின்றன. அவற்றை மீனவ பெண்கள் சேகரித்து விவசாயிகளிடம் விற்பனை செய்கின்றனர். ஒரு மூடை ரூ.50 வரை விற்பனை செய்யப்படுகிறது.

**கண்மாய்கள் நிரம்பாததால் விவசாயிகள்....அடைமழை பெய்தும் விவசாயம் கேள்விக்குறி**

ஆர்.எஸ்.மங்கலம்,:பருவ மழை பெய்தும் கண்மாய் களில் தண்ணீர் தேங்காததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். ராமநாதபுரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடர்ந்து ஒருவாரம் பெய்தது. சாரலுடன் அவ்வப்போது பலத்த மழை பெய்தும் நீர்நிலைகள் நிரம்ப வில்லை. குறிப்பாக ஆர்.எஸ். மங்கலம் பெரிய கண்மாய் தமிழகத்தின்

இரண்டாவது பெரிய கண்மாய் ஆகும். இதன்மூலம் பாசன வசதி பெறும் திருவாடானை தாலுகா மாவட்டத்தின் நெற்களஞ்சியமாக திகழ்கிறது. இந்த கண்மாயில் 1,205 மில்லியன் கன அடி தண்ணீர் தேக்கிவைக்கலாம். இதன்மூலம் 12 ஆயிரத்து 142 ஏக்கர் விவசாய நிலம் பாசனம் பெறுகிறது. மேலும் இந்த கண்மாயில் நிரம்பி வழியும் தண்ணீர் அருகில் உள்ள 72 சிறிய கண்மாய்களை நிரப்புகிறது. இதற்காக சங்கிலித்தொடர்போன்று வரத்துவாரிகள் அமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த பெரிய கண்மாய் உட்பட மாவட்டத்தில் 300க்கும் மேற்பட்ட சிறிய கண்மாய்களில், ஓரளவு பருவமழை பெய்தும் தண்ணீர் தேங்காமல் புதர் மண்டி உள்ளன. இதனால் அப்பகுதி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.இது குறித்து பெரிய கண்மாய் நீரினை பயன்படுத்துவோர் சங்க தலைவர் செல்லத்துரை கூறுகையில், ""ஒருவாரம் தொடர்ந்து மழை பெய்தும் கண்மாய்களில் தண்ணீர் தேங்கவில்லை. வரத்துவாரிகள் மாய மானதால் இந்த நிலை ஏற்பட் டுள்ளது. நெல் பயிர்கள் 40 நாள் வளர்ச்சியை எட்டியுள்ள நிலையில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுமோ என்ற அச்சம் நிலவுகிறது. பலத்த மழை பெய்தால் மட்டுமே கண்மாய்கள் நிரம்பும். தவறினால் இந்த ஆண்டும் விவசாயம் கேள்விக்குறி தான்," என்றார்.

### பகலில் வெயில்இரவில் கொட்டும் மழைவிவசாயிகள் மகிழ்ச்சி

சிவகங்கை: பகலில் வெயில்,இரவில் கொட்டும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.தமிழகத்தில் கடலோர பகுதியில் பலத்த மழை பெய்து வருகிறது. அதே நேரம் சிவகங்கையில், அவ்வப்போது மட்டுமே மழை பெய்து வருகிறது. அதிக மழை இல்லாததால் மாநிலத்தி லேயே அதிக கண்மாய் உள்ள மாவட்டங்களில் 2வது இடம் பிடித்த சிவகங்கை கண்மாய்களில் போதிய அளவில் மழை நீர் சேகரமில்லை. மாவட்டத்தில் இது வரை 61 ஆயிரம் எக்டேரில் விவசாயிகள் மானாவாரியாக நெல் நடவு செய்துள்ளனர். ஆடியில் நாற்று நடவு செய்த விவசாயிகளின் நெற்பயிர் கருகாத வகையில், இந்த மழை கைகொடுத்து வருகிறது. மேலும், வயல்களில் தேங்கும் நீரை வைத்து, வாணியங்குடி, ஒக்கூர், சோழபுரம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த விவசாயிகள்

நாற்றுக்களை பறித்து, நட்டு வருகின்றனர். இனிவரும் மழை கைகொடுக்கும் என்ற நம்பிக்கையில், விவசாயிகள் நெல் நடவு பணிகளை துவக்கியுள்ளனர். மழை நிலவரம்: காரைக்குடி - 7.04 மி.மீ., திருப்புவனம் - 20.80, திருப்புத்தூர் - 14, தேவகோட்டை - 9.20, சிவகங்கை - 43 மி.மீ.,

**அதிக மகசூலுக்கு விதை ஆய்வு அவசியம்**

சிவகங்கை: ""நெல்லில் அதிக மகசூல் பெற விதைகளை ஆய்வு செய்ய வேண்டும்," என வேளாண்மை அலுவலர் தமிழ்செல்வி தெரிவித்தார்.அவர் கூறியதாவது: தொடர் மழைக்கு விவசாயிகள் நெல் விதைப்பு பணியில் இறங்கி வருகின்றனர். விதைக்கும் விதை நல்ல தரமான வீரியமுள்ள விதையாக இருந்தால் மட்டுமே நாற்றுகள் வீரியமாக வளரும். இதன் மூலம் அதிக மகசூல் கிடைக்கும்.எனவே, விதை ஆய்வு செய்வது அவசியம். நெல் விதையில் 100 விதைத்தால், 80 வீரிய நாற்றுக்கள் கிடைக்கவேண்டும். அப்போது தான் உரம், மண்ணில் உள்ள சத்துக்களை நன்கு எடுத்து, அதிக எண்ணிக்கையில் தூர்கள் கட்டி பயிர் செழித்து வளரும். கதிர்களும் நன்கு திறட்சியாக இருக்கும். விவசாயிகள், சிவகங்கையில், மதுரை ரோட்டில் உள்ள விதை பரிசோதனை மையத்தில் ரூ.30 செலுத்தி, இருப்பு வைத்துள்ள விதை நெல்லில், 50 கிராம் மட்டுமே கொடுத்தால், 14 நாட்களுக்கு பின் முடிவு விவசாயிகளின் முகவரிக்கே அனுப்பி வைக்கப்படும், என்றார்.

**இளையான்குடியில் மழை இல்லாததால் காயும் நெல் வயல்: விவசாயிகள் கவலை**

இளையான்குடி: மாவட்டத்தில் பல்வேறு பகுதியில் மழை பெய்து வரும் நிலையில் இளையான்குடியில் மழை பெய்யாததால் பயிர் களுக்கு உரம் போட முடியாமல், களையெடுக்க முடியாமல் விவசாயிகள் அவதிப் படுகின்றனர். இளையான்குடி ஒன்றியத்தில் 300க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. மக்களின் பிரதான தொழில் விவசாயம். கடந்த ஆண்டு இப்பகுதியில் நல்ல மழை பெய்து விவசாயம் நடந்தது. ஒவ்வொரு ஆண்டும் ஆவணி யில் விவசாயிகள் உழவுப் பணியை துவங்கி விடுவது வழக்கம். நடப்பாண்டில் மழை தாமதமாக பெய்ததையடுத்து விவசாயிகள் புரட்டாசி மாதத்தில் உழவு செய்து விதைப்பு செய்தனர்.

அடுத்தடுத்து மழை பெய்ததால் பயிர்கள் முளைக்க துவங்கியது. விவசாயிகள் தொடக்க விவசாய கூட்டுறவு கடன் சங்கங்களில் கடன் பெற்று உரங்களை வாங்கி வீடுகளில் இருப்பு வைத்த நிலையில், தொடர்ந்து மழை பெய்ய வில்லை. மழை பெய்து கண்மாய்களில் தண்ணீர் இல்லாததால், பயிர்களுக்கு களை எடுக்க முடியாமலும், உரம் போட முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

கடந்த வாரம் உருவான புயலால் எப்படியும் மழை பெய்யும் என எதிர்பார்த்தனர். ஆனால் இளையான்குடி பகுதியில் சில இடங்களில் மட்டும் தூறல் மழை பெய்தது. விவசாயிகள் பயிர்களுக்கு பருவத்தில் செய்ய வேண்டிய களையெடுப்பு,உரம் போடும் பணியை செய்ய முடியாமல் அவதிப்படுகின்றனர். விவசாயி ரவிச்சந்திரன் கூறுகையில், இந்த ஆண்டு மழை தாமதமாக பெய்ததால், விதைப்பு பணி புரட்டாசி மாதத்தில் துவங்கியது. உழவு கூலி, விதை நெல், களைக் கொல்லி, களை தெளிப்பான் என ஒரு ஏக்கருக்கு இதுவரை ரூபாய் பத்தாயிரம் வரை செலவு செய்துள்ளோம்.தொடக்க விவசாயக் கூட்டுறவு கடன் சங்கத்தில் கடன் பெற்று வாங்கிய உரங்களை வயல்களில் தண்ணீர் இல்லாததால், உரங்களை பயிர்களுக்கு போட முடியாமல் வீட்டில் வைத்துள்ளோம், என்றார்.

## நெல்லையில் பிசான நெல் சாகுபடி துவக்கம்:ஒரு லட்சத்து 40 ஆயிரம் ஏக்கரில் நடவு பணி

திருநெல்வேலி:நெல்லை மாவட்டத்தில், பிசான பருவ நெல் சாகுபடிக்கான நடவு பணிகள் துவங்கியுள்ளன. தாமிரபரணி ஆற்று பாசனத்தின் மூலம் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் சுமார் 86 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. ஆண்டுதோறும் ஜூன் மாதத்தில் பெய்யும் தென்மேற்கு பருவமழையை நம்பி

கார் பருவ நெல்சாகுபடி நடக்கிறது. அக்டோபர் துவங்கி நான்கு மாதங்களில் வடகிழக்கு பருவமழைக்காலத்தில் பிசான நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. நெல்லை மாவட்டத்தில் கருப்பாநதி , குண்டாறு, ராமநதி, கடனாநதி ஆகிய சிறிய அணைகள் நிரம்பிவிட்டன. இந்த அணைகளில் இருந்தும் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

143 அடி உயரம் கொண்ட பாபநாசம் அணையின் நீர்மட்டம் 104 அடியை கடந்துவிட்டது. பாபநாசம், சேர்வலாறு அணைகளில் இருந்தும்

தேவைக்கேற்ப தண்ணீர் திறக்கப்படுகிறது. எனவே நெல்லை, தூத்துக்குடிமாவட்டங்களில் பிசான நெல் சாகுபடிக்கான நடவுப்பணிகள் முழுவீச்சில் துவங்கியுள்ளன. தாமிரபரணி ஆற்றின் மூலம் நெல்லையில் 40 ஆயிரம் ஏக்கர், தூத்துக்குடியில்46 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. இவை தவிர நெல்லை மாவட்டத்தில் தென்காசி, கடையநல்லூர், புளியங்குடி, சங்கரன்கோவில், ராதாபுரம் என மற்ற அணைகளின் நீர்ப் பாசனத்தின் மூலம் சுமார் ஒரு லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. எனவே இந்த பருவத்தில் நெல்லை மாவட்டத்தில் மொத்தம் ஒரு லட்சத்து 40 ஏக்கர் நிலத்தில் நெல் நடவுப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே விவசாயிகள், உழவு, நாற்று பாவுதல், நடவு, உரம் போடுதல் போன்ற சாகுபடி பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர். நெல்லையில்பிசான சாகுபடி பணிகள் தீவிரமடைந்துள்ளது. விவசாயத்திற்கு தேவையான யூரியா உரம், பூச்சி மருந்துகள் தட்டுபாடு இல்லாமல் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக கு.ராமசாமி மீண்டும் தேர்வு**

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 11-வது துணை வேந்தராக கு.ராமசாமி மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 10-வது துணை வேந்தராக கடந்த 26.8.2012 அன்று முனைவர் கு.ராமசாமி பொறுப்பேற்றார். இவரது மூன்று ஆண்டு பதவிக் காலம் கடந்த ஆகஸ்ட் 26-ம் தேதி நிறைவடைந்தது.

இதையடுத்து பல்கலைக்கழக பதிவாளர் கு.ரா.ஆனந்தகுமார் துணை வேந்தரின் பொறுப்புகளை கவனித்து வந்தார்.

இதற்கிடையே புதிய துணை வேந்தரை தேர்வு செய்வதற்கான மூன்று உறுப்பினர்கள் அடங்கிய குழுவை அரசு அமைத்தது. ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி பி.என்.வேதநாராயணனை தலைவராக கொண்ட இந்த குழுவில், சன் அக்ரோ பயோடெக் ஆய்வு மையத்தின் இயக்குநர் சீனிவாசன் சித்தானந்தம், தில்லி ஐ.சி.ஏ.ஆர். இயக்குநர் எஸ்.அய்யப்பன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இந்த குழுவுக்கு 40-க்கும் மேற்பட்டோர் விண்ணப்பங்களை அனுப்பியிருந்தனர். இதையடுத்து துணை வேந்தர் பதவிக்கான 3 பேர் அடங்கிய பரிந்துரை பட்டியல் அரசுக்கு அனுப்பப்பட்டது. இந்த பட்டியலில் இடம் பிடித்திருந்த கு.ராமசாமியை 2-வது முறையாக வேளாண்மைப் பல்கலைக்கழக துணை வேந்தராக நியமித்து வேந்தரும் ஆளுநருமான கே.ரோசய்யா உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து பல்கலைக்கழகத்தின் 11-வது துணை வேந்தராக கு.ராமசாமி திங்கள்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் 2018 நவம்பர் மாதம் வரையிலும் இந்த பதவியில் நீடிப்பார்.

பொதுவாக 70 வயதுக்கு பிறகு துணை வேந்தர்கள் தங்களது பதவியில் தொடர முடியாது என்றாலும் இந்த விதியில் இருந்து வேளாண்மைப் பல்கலைக்கழக துணை வேந்தர்களுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்பட்டிருப்பதால், தனது 70-வது வயதைக் கடந்த பின்னரும் 6 மாதங்களுக்கு கு.ராமசாமி பதவியில் தொடருவார்.

**வாழ்க்கைக் குறிப்பு**

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகேயுள்ள நிலையூரைச் சேர்ந்த கு.ராமசாமி, 1948-ஆம் ஆண்டு மே முதல் தேதி பிறந்தார். திருவாரூர், அறந்தாங்கியில் பள்ளிப் படிப்பை முடித்த இவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை, முதுகலை பட்டங்களை முடித்தார்.

பெல்ஜியத்தின் கத்தோலிக் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிப் படிப்பை முடித்த ராமசாமி, கடந்த 1970 - ஆம் ஆண்டில் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பணியில் சேர்ந்தார்.

பல்கலைக்கழகத்தில் மண்ணியல், நுண்ணுயிரியல், உயிரி ஆற்றல், சுற்றுச்சூழல் அறிவியல், உயிரி தொழில்நுட்பத் துறைகளில் பேராசிரியராகப் பணியாற்றிய இவர், இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில், அறிவியல், தொழில் ஆராய்ச்சி கவுன்சில், பல்கலைக்கழக மானியக் குழு, உயிரி தொழில்நுட்பத் துறை போன்றவற்றில் உறுப்பினராக பதவி வகித்துள்ளார். அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக டீன், கோவை கற்பகம் பல்கலைக்கழக துணை வேந்தராகப் பணியாற்றினார். மாநில திட்டக் குழு உறுப்பினராக (வேளாண்மை, பாசனம்) இருந்து வருகிறார்.

### 12 நாட்களுக்குப் பின் குமரி மீனவர்கள் கடலுக்குச் சென்றனர்

குமரியில் 12 நாட்களுக்குப் பின் விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர்.

கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வந்ததால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாமல் அவதிக்குள்ளாகினர். இந்நிலையில் மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

மழை சற்று குறைந்துள்ளதால் 12 நாட்களுக்கு பின்னர் இன்று விசைப்படகு மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்குச் சென்றுள்ளனர்.

### திருவள்ளூர் மாவட்டத்தில் 826 ஏரிகள் நிரம்பின

தொடர் மழை காரணமாக, திருவள்ளூர் மாவட்டத்தில் மொத்தம் 826 ஏரிகள் நிரம்பின.

திருவள்ளூர் மாவட்டத்தில் மொத்தமுள்ள 1,236 ஏரிகளில், 862 ஏரிகள் முழுமையாக நிரம்பியுள்ளன. எஞ்சிய 373 ஏரிகளில், 367 ஏரிகளில் 60 சதவீதமும், 7 ஏரிகளில் 50 சதவீகிதத்திற்கு குறைவாகவும் நீர் நிரம்பியுள்ளன. பேரம்பாக்கத்தை அடுத்த கூவம், கொண்டஞ்சேரி, சத்தரை போன்ற பகுதிகளில் ஏரிகள் நிரம்பி சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடின. திருத்தண்டலம் குசஸ்தலையாறு கரையோரப் பகுதிகள் வலுவிழந்ததனால்

ஆற்று நீர் வீடுகளில் புகுந்தது. தண்ணீரில் தத்தளித்த 528 நபர்கள் மீட்கப்பட்டு சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். குசஸ்தலையாற்றின் கரையோரப் பகுதிகளில் வலுவிழந்த கரைகளைப் பலப்படுத்த 45 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில், மொத்தம் 111 முகாம்களில் 8,423 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு உணவு, குடிநீர் உள்ளிட்டவை வழங்கப்படுகின்றன.

**தக்காளி விலை வரலாறு காணாத அளவு உயர்வு: கிலோ ரூ.100-ஐ தாண்டியது**



பலத்த மழையின் எதிரொலியாக, தக்காளியின் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளது. மழைக்கு முன்பு கிலோ ரூ.45-க்கு விற்கப்பட்ட தக்காளி மொத்த விலையில் ரூ.85-க்கும், சில்லறை விலையில் தரத்துக்கேற்றவாறு ரூ.90 முதல் ரூ.115 வரையிலும் விற்பனையாகிறது. சென்னை கோயம்பேடு சந்தைக்கு தமிழகம், ஆந்திரம், கர்நாடகம், கேரளம் உள்பட பல்வேறு மாநிலங்களிலிருந்து தினமும் 3,500 முதல் 4,000 டன்னுக்கு மேற்பட்ட காய்கறிகள் லாரிகள் மூலம் விற்பனைக்காக கொண்டுவரப்படுகின்றன.

தமிழகத்தில் கடந்த 11-ஆம் தேதி முதல் பலத்த மழை பெய்து வருகிறது. இதைத் தொடர்ந்து, கோயம்பேடு சந்தைக்கு கொண்டுவரப்படும் காய்கறிகளின் வரத்து பாதியாகக் குறைந்துள்ளது. குறிப்பாக, தக்காளி 900 டன்னாக இருந்த

தக்காளியின் வரத்து 400 டன்னாக குறைந்துள்ளது. இதனால் மொத்த விலையில் ஒரு கிலோ தக்காளி ரூ.75 முதல் ரூ.85 வரை விற்கப்பட்டது. இந்த விலை உயர்வு சில்லறை விற்பனையில் கடுமையாக எதிரொலித்துள்ளது. சென்னை, புறநகர்ப் பகுதிகளில் சில்லறை விலையில் செவ்வாய்க்கிழமை ஒரு கிலோ தக்காளி ரூ.100 முதல் ரூ.130 வரை விற்கப்பட்டது. இதேபோல், பெரிய வெங்காயம், பீன்ஸ், முருங்கைக்காய் உள்ளிட்ட பெரும்பாலான காய்கறிகள் கடந்த 4 நாள்களில் கிலோவுக்கு ரூ.15 முதல் ரூ.40 வரை விலை அதிகரித்துள்ளது.

கொத்துமல்லி: சமையலில் துணைப் பொருளாகப் பயன்படுத்தப்படும் கொத்துமல்லி சிறிய கட்டின் சில்லறை விலை ரூ.20-ஆகவும் பெரிய கட்டின் சில்லறை விலை ரூ.50-ஆகவும் விற்பனை செய்யப்படுகிறது.

உற்பத்தி பாதிப்பு: இதுகுறித்து கோயம்பேடு சந்தை வியாபாரிகள் சங்க ஆலோசகர் சௌந்தரராஜன் கூறியது:

சந்தைக்கு தினமும் 60,000-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்திருந்து சில்லறை விற்பனைக்காக காய்கறிகளை வாங்கிச் செல்வர். கடந்த ஒரு வாரத்துக்கும் மேல் பெய்த பலத்த மழையின் காரணமாக திங்கள்கிழமை, செவ்வாய்க்கிழமை ஆகிய இருநாள்களிலும் 40 சதவீத வியாபாரிகளே வந்தனர்.

சேதம் காரணமாகவும்...:மேலும் கர்நாடகம், ஆந்திரம், தமிழகத்தில் தக்காளி விளைச்சல் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், அவற்றின் வரத்து தொடர்ந்து குறைந்து வருகிறது. கொண்டுவரப்படும் தக்காளியில் 20 சதவீதம் சேதமடைந்துள்ளது. குழம்பு, பொரியல், சாம்பார், சட்னி உள்பட அனைத்து உணவு வகைகளுக்கும் தக்காளி தேவைப்படுவதால் அதன் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது என்றார்.

**சென்னையில் செவ்வாய்க்கிழமை காய்கறிகளின் விலை நிலவரம்**

| கோயம்பேடு சந்தை | மொத்த விலை | சில்லறை விலை |
|---|---|---|
| முதல் தர தக்காளி | ரூ.70-85 | ரூ.100-115 |
| பெரிய வெங்காயம் | ரூ.60-70 | ரூ.75-85 |
| சின்ன வெங்காயம் | ரூ.50-60 | ரூ.65-80 |
| முருங்கைக்காய் | ரூ.70 | ரூ. 90 |
| வெண்டைக்காய் | ரூ.45 | ரூ.70 |
| கத்தரிக்காய் | ரூ.50 | ரூ.70 |
| முட்டைக்கோஸ் | ரூ15 | ரூ.25 |
| கேரட் | ரூ.50-60 | ரூ.65 |
| பீன்ஸ் | ரூ.50 | ரூ.75 |
| நூல்கோல் | ரூ.35 | ரூ.40 |
| காலிஃப்ளவர் | ரூ.35 | ரூ.45 |
| புடலை | ரூ.25 | ரூ.36 |
| பீட்ரூட் | ரூ.25 | ரூ.42 |
| பச்சை மிளகாய் | ரூ.25 | ரூ.40 |
| அவரை | ரூ.60 | ரூ.75 |
| பாகற்காய் | ரூ.45 | ரூ.50 |
| இஞ்சி பழையது | ரூ.80 | ரூ.100 |

**வேளாண்மை பல்கலைக்கழகத்தில் திருச்சூர் பல்கலை. குழு ஆய்வு**

கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் திருச்சூர் வேளாண்மைப் பல்கலைக்கழக உயர் நிலைக் குழுவினர் செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்டனர்.தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நாட்டின் முதன்மையான வேளாண் பல்கலைக்கழகங்களில் ஒன்றாக உள்ளது. இதனால் இங்கு பல்வேறு மாநில வேளாண் பல்கலைக்கழக குழுக்கள், வெளிநாட்டுக் குழுக்கள் அவ்வப்போது ஆய்வு நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆராய்ச்சித் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்வதற்காக கேரள மாநிலத்தின் திருச்சூர் வேளாண்மைப் பல்கலைக்கழக உயர் நிலைக் குழுவினர் செவ்வாய்க்கிழமை வந்தனர்.

சட்டமன்ற உறுப்பினர் எம்.பி.வின்சென்ட் தலைமையிலான இந்த குழுவினர், பல்கலைக்கழகத்தின் பல்வேறு ஆய்வு மையங்களுக்குச் சென்று அங்கு நடைபெறும் ஆராய்ச்சிகள் குறித்து கேட்டறிந்தனர்.

தொடர்ந்து, நானோ தொழில்நுட்பம், இயற்கை வழி வேளாண்மை, மின் ஊடகங்கள் வழியாக வேளாண்மை விரிவாக்கம், அறுவடை பின்சார் தொழில் நுட்பம் உள்ளிட்ட துறைகளுக்குச் சென்று பேராசிரியர்கள், மாணவர்களை சந்தித்து உரையாடினர்.

முன்னதாக இந்த குழுவினர் பல்கலைக்கழக துணை வேந்தர் கு.ராமசாமியை சந்தித்துப் பேசினர். அப்போது அவர்கள், தமிழ்நாடு பல்கலைக்கழகத்தில் செயல்படுத்தப்படும் ஆராய்ச்சிகள், திட்டங்களை தாங்களும் பின்பற்றப் போவதாக துணை வேந்தரிடம் தெரிவித்துள்ளனர்.

**ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் இழப்பீடு வழங்க கோரிக்கை**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 25 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து இச் சங்கத்தின் மாவட்டச் செயலர் கே.நேரு வெளியிட்ட அறிக்கை:

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மழை காரணமாக பலர் இறந்துள்ளனர். மேலும் 60 வீடுகள் இடிந்தும், 324 வீடுகள் சேதமாகியும் உள்ளன. கால்நடைகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. கிராமங்களில் நெல் பயிர்கள், நெல் நாற்றுகள் சுமார் 10 ஆயிரம் ஹெக்டேர் தண்ணீரில் மூழ்கியுள்ளன. மாவட்ட நிர்வாகம் ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்.

மழையில் உயிர் இழந்தவர்களுக்கு ரூ. 10 லட்சமும், முழுமையாக வீடு இழந்தவர்களுக்கு ரூ. 25 ஆயிரமும், தண்ணீர் தேங்கிய வீடுகளுக்கு ரூ. 10 ஆயிரமும், இறந்த மாட்டுக்கு ரூ. 25 ஆயிரமும், இறந்த ஆடுகளுக்கு ரூ. 5 ஆயிரமும் நிவாரணம் வழங்க வேண்டும். தொடர் மழையால் காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதும் பல்வேறு குடும்பங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு

வேலையில்லை. எனவே குடும்பம் ஒன்றுக்கு 25 கிலோ அரிசி, ரூ. 2 ஆயிரம் வழங்க வேண்டும், பொதுமக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### திருவள்ளூர் மாவட்டத்தில் 826 ஏரிகள் நிரம்பின

**தொடர் மழை காரணமாக, திருவள்ளூர் மாவட்டத்தில் மொத்தம் 826 ஏரிகள் நிரம்பின.**

**திருவள்ளூர் மாவட்டத்தில் மொத்தமுள்ள 1,236 ஏரிகளில், 862 ஏரிகள் முழுமையாக நிரம்பியுள்ளன. எஞ்சிய 373 ஏரிகளில், 367 ஏரிகளில் 60 சதவீதமும், 7 ஏரிகளில் 50 சதவீகிதத்திற்கு குறைவாகவும் நீர் நிரம்பியுள்ளன.**

**பேரம்பாக்கத்தை அடுத்த கூவம், கொண்டஞ்சேரி, சத்தரை போன்ற பகுதிகளில் ஏரிகள் நிரம்பி சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடின.**

**திருத்தண்டலம் குசஸ்தலையாறு கரையோரப் பகுதிகள் வலுவிழந்ததனால் ஆற்று நீர் வீடுகளில் புகுந்தது. தண்ணீரில் தத்தளித்த 528 நபர்கள் மீட்கப்பட்டு சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.**

**குசஸ்தலையாற்றின் கரையோரப் பகுதிகளில் வலுவிழந்த கரைகளைப் பலப்படுத்த 45 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.**

**மாவட்டத்தில், மொத்தம் 111 முகாம்களில் 8,423 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு உணவு, குடிநீர் உள்ளிட்டவை வழங்கப்படுகின்றன.**

### சோழவந்தானில் 82 மிமீ மழை

மதுரை மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை பரவலாக மழை பெய்துள்ளது.

செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியுடன் முடிந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் அதிகபட்சமாக சோழவந்தானில் 84 மிமீ மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தின் பிற பகுதிகளில் பதிவான மழையளவு (மில்லி மீட்டரில்) வருமாறு:

சிட்டம்பட்டி - 67.08, கள்ளந்திரி - 26, தனியாமங்கலம் - 12, மேலூர் - 31, சாத்தையாறு - 30, வாடிப்பட்டி - 50, திருமங்கலம் - 20.06, உசிலம்பட்டி - 24.06, மதுரை தெற்கு - 42.02, தல்லாகுளம் - 35, விரகனூர் - 35.05, மதுரை விமான நிலையம் - 8, இடையபட்டி - 80.04, புலிப்பட்டி - 14.04, சோழவந்தான் - 82, மேட்டுப்பட்டி - 11, குப்பனம்பட்டி - 5, கள்ளிக்குடி -12, பேரையூர் - 19, ஆண்டிப்பட்டி - 12.

### பெரியாறு அணை நீர்மட்டம் 131 அடியாக உயர்வு

பெரியாறு அணை நீர்பிடிப்பில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், செவ்வாய்க்கிழமை அணையின் நீர்மட்டம் 131 அடியாக உயர்ந்தது.

மழையளவு (மி.மீ.): ஆண்டிபட்டி- 25, அரண்மனைப்புதூர்- 13.6, வீரபாண்டி- 12.6, போடி- 20.8, மஞ்சளார்- 3, பெரியகுளம்- 11, சோத்துப்பாறை- 40, வைகை அணை நீர்பிடிப்பு- 43.2, பெரியாறு அணை நீர்பிடிப்பு- 15, தேக்கடி- 6.6. அணைகளின் நீர்மட்டம்: பெரியாறு அணை நீர்மட்டம் 131 அடியாக இருந்தது. அணைக்கு நீர் வரத்து விநாடிக்கு 786 கன அடி. அணையில் இருந்து தமிழகப் பகுதிக்கு விநாடிக்கு 511 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. அணையில் தண்ணீர் இருப்பு 4,931 மில்லியன் கன அடி. வைகை அணை நீர்மட்டம் 55.94 அடியாக இருந்தது. அணைக்கு நீர் வரத்து விநாடிக்கு 1,250 கன அடி. அணையில் தண்ணீர் இருப்பு 2,871 மில்லியன் கன அடி. அணையில் இருந்து விநாடிக்கு 60 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. மஞ்சளார் அணை நீர்மட்டம் 56.50 அடியாக இருந்தது. அணைக்கு தண்ணீர் வரத்து மற்றும் தண்ணீர் திறப்பு விநாடிக்கு 199 கன அடி. சோத்துப்பாறை அணையின் முழு உயரமான 126.28 அடிக்கு நீர் நிரம்பி, அணையில் இருந்து விநாடிக்கு 100 கன அடி வீதம் தண்ணீர் வெளியேறுகிறது. அணைக்கு தண்ணீர் வரத்து விநாடிக்கு 100 கன அடி.

### திராட்சை சொட்டுநீர் பாசனத்துக்கு 100 சதவீதம் மானியம்: ஆட்சியர்

தேனி மாவட்டம், சின்னமனூர் அடுத்த ஓடைப்பட்டியில் நடைபெற்ற திராட்சை மற்றம் மாதுளை கருத்தரங்கு நிகழ்ச்சியில், திராட்சை விவசாயத்துக்கு

சொட்டுநீர் அமைத்திட 100 சதவீதம் மானியம் வழங்குவதாக, மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாசலம் அறிவித்தார்.

இந்த கருத்தரங்கை தொடக்கிவைத்துப் ஆட்சியர் பேசியதாவது: உத்தமபாளையம் அருகேயுள்ள ஆணைமலையன்பட்டி திராட்சை ஆராய்ச்சி மையத்தின் மூலமாக நவீன தொழில்நுட்பங்கள் குறித்து, விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் தேனி, திண்டுக்கல், கோவை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் திராட்சை அதிகளவில் பயிரிடப்படுகிறது. திராட்சை ஏற்றுமதி மூலம் ரூ.40,861 கோடிக்கு அந்நிய செலாவணி கிடைத்துள்ளது. மொத்த உற்பத்தியில் 80 சதவீதம் தேனி மாவட்டத்தில் கிடைக்கிறது. பிற மாநிலங்களான மகாராஷ்டிரத்தில் ஆண்டுக்கு ஒருமுறையும், ஆந்திரத்தில் ஆண்டுக்கு இரு முறையும் திராட்சை மகசூல் நடைபெறுகிறது. ஆனால், தேனி மாவட்டத்தில் மட்டும் ஆண்டுக்கு 3 முறை மகசூல் செய்யப்படுகிறது.

இதனால், தேசிய தோட்டக்கலைத் துறை சார்பில் ஹெக்டேருக்கு ரூ. 40 ஆயிரம் வரை மானியம் வழங்கப்படுகிறது. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம் அமைத்திட 100 சதவீதமும் மற்ற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. இது தவிர, திராட்சை பந்தல் அமைப்பதற்காக ரூ. 2 லட்சம் வரை மானியம் வழங்கும் வழிமுறைகள் உள்ளதாகவும் தெரிவித்தார். எனவே, விவசாயிகள் இதுபோன்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சிக்கு, தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் சின்னராஜ், திராட்சை ஆராய்ச்சி மைய பேராசிரியர்களான சுப்பையா மற்றும் பார்த்திபன், ஓடைப்பட்டி பேரூராட்சித் தலைவர் பரமேஸ்வரி மனோகரன், திராட்சை மற்றும் மாதுளை பயிரிடும் விவசாயிகள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

**பாலிதீன் தாள்களால் தைராய்டு, மலட்டுத் தன்மை ஏற்படும்: மாவட்ட நியமன அலுவலர் எச்சரிக்கை**

பாலிதீன் தாள்களில் கொண்டு செல்லப்படும் உணவுப் பொருள்களை உண்பதால் தைராய்டு நோய், மலட்டுத் தன்மை ஏற்படும் என மாவட்ட நியமன அலுவலர் உணவுப் பாதுகாப்பு பிரிவு மு. கவிக்குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: விருதுநகர் மாவட்டத்தில் பல உணவகங்களில் சூடான உணவுகளை பொட்டலங்களாகக் கட்ட பாலிதீன் தாள்களைப் பயன்படுத்துகின்றனர்.

இந்த வகை தாள்கள் பி-பினால்-ஏ என்ற ரசாயன பொருளை வெளிப்படுத்துகிறது. இந்த வேதிப்பொருள் தைராய்டு நோயை உருவாக்கும்.

மேலும்,இந்த தாள்களை எரிக்கும்போது இதிலிருந்து வெளிப்படும் டை ஆக்ஸின் என்ற வாயுவை சுவாசிக்கும்போது பொதுமக்களுக்கு வயிற்றுக் கோளாறு, பசியின்மை ஏற்படுகிறது.

மேலும், தொடர்ந்து பாலிதீன் தாள்களில் வைக்கப்பட்ட உணவுகளை உண்பதால் மலட்டுத் தன்மை ஏற்படவும் வாய்ப்புள்ளது.

சில உணவகங்களில் உணவு பரிமாற வாழை இலை போன்ற தாள்களை பயன்படுத்துகிறார்கள். இதில், சூடான உணவுகளைப் பரிமாறும்போது தாள்களின் மேல் உள்ள மெழுகு உணவுடன் கலக்கிறது.

எனவே உணவுப் பொருள் விற்பனையாளர்கள் உணவுப் பொருள்களை பாலிதீன் தாள்களில் வைத்து பயன்படுத்தக் கூடாது. இதுகுறித்து கண்காணிக்க உணவு பாதுகாப்பு அலுவலர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் உணவகங்களில் ஆய்வு செய்யும்போது பாலிதீன் தாள்கள் இருப்பதை கண்டுபிடித்தால், அவற்றை பறிமுதல் செய்வதுடன், உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டப்படி நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

**பாலிதீன் தாள்களால் தைராய்டு, மலட்டுத் தன்மை ஏற்படும்: மாவட்ட நியமன அலுவலர் எச்சரிக்கை**

பாலிதீன் தாள்களில் கொண்டு செல்லப்படும் உணவுப் பொருள்களை உண்பதால் தைராய்டு நோய், மலட்டுத் தன்மை ஏற்படும் என மாவட்ட நியமன அலுவலர் உணவுப் பாதுகாப்பு பிரிவு மு. கவிக்குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: விருதுநகர் மாவட்டத்தில் பல உணவகங்களில் சூடான உணவுகளை பொட்டலங்களாகக் கட்ட பாலிதீன் தாள்களைப் பயன்படுத்துகின்றனர்.

இந்த வகை தாள்கள் பி-பினால்-ஏ என்ற ரசாயன பொருளை வெளிப்படுத்துகிறது. இந்த வேதிப்பொருள் தைராய்டு நோயை உருவாக்கும்.

மேலும்,இந்த தாள்களை எரிக்கும்போது இதிலிருந்து வெளிப்படும் டை ஆக்ஸின் என்ற வாயுவை சுவாசிக்கும்போது பொதுமக்களுக்கு வயிற்றுக் கோளாறு, பசியின்மை ஏற்படுகிறது.

மேலும், தொடர்ந்து பாலிதீன் தாள்களில் வைக்கப்பட்ட உணவுகளை உண்பதால் மலட்டுத் தன்மை ஏற்படவும் வாய்ப்புள்ளது.

சில உணவகங்களில் உணவு பரிமாற வாழை இலை போன்ற தாள்களை பயன்படுத்துகிறார்கள். இதில், சூடான உணவுகளைப் பரிமாறும்போது தாள்களின் மேல் உள்ள மெழுகு உணவுடன் கலக்கிறது.

எனவே உணவுப் பொருள் விற்பனையாளர்கள் உணவுப் பொருள்களை பாலிதீன் தாள்களில் வைத்து பயன்படுத்தக் கூடாது. இதுகுறித்து கண்காணிக்க உணவு பாதுகாப்பு அலுவலர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் உணவகங்களில் ஆய்வு செய்யும்போது பாலிதீன் தாள்கள் இருப்பதை கண்டுபிடித்தால், அவற்றை பறிமுதல் செய்வதுடன், உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டப்படி நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

## பாலிதீன் தாள்களால் தைராய்டு, மலட்டுத் தன்மை ஏற்படும்: மாவட்ட நியமன அலுவலர் எச்சரிக்கை

பாலிதீன் தாள்களில் கொண்டு செல்லப்படும் உணவுப் பொருள்களை உண்பதால் தைராய்டு நோய், மலட்டுத் தன்மை ஏற்படும் என மாவட்ட நியமன அலுவலர் உணவுப் பாதுகாப்பு பிரிவு மு. கவிக்குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: விருதுநகர் மாவட்டத்தில் பல உணவகங்களில் சூடான உணவுகளை பொட்டலங்களாகக் கட்ட பாலிதீன் தாள்களைப் பயன்படுத்துகின்றனர்.

இந்த வகை தாள்கள் பி-பினால்-ஏ என்ற ரசாயன பொருளை வெளிப்படுத்துகிறது. இந்த வேதிப்பொருள் தைராய்டு நோயை உருவாக்கும்.

மேலும்,இந்த தாள்களை எரிக்கும்போது இதிலிருந்து வெளிப்படும் டை ஆக்ஸின் என்ற வாயுவை சுவாசிக்கும்போது பொதுமக்களுக்கு வயிற்றுக் கோளாறு, பசியின்மை ஏற்படுகிறது.

மேலும், தொடர்ந்து பாலிதீன் தாள்களில் வைக்கப்பட்ட உணவுகளை உண்பதால் மலட்டுத் தன்மை ஏற்படவும் வாய்ப்புள்ளது.

சில உணவகங்களில் உணவு பரிமாற வாழை இலை போன்ற தாள்களை பயன்படுத்துகிறார்கள். இதில், சூடான உணவுகளைப் பரிமாறும்போது தாள்களின் மேல் உள்ள மெழுகு உணவுடன் கலக்கிறது.

எனவே உணவுப் பொருள் விற்பனையாளர்கள் உணவுப் பொருள்களை பாலிதீன் தாள்களில் வைத்து பயன்படுத்தக் கூடாது. இதுகுறித்து கண்காணிக்க உணவு பாதுகாப்பு அலுவலர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் உணவகங்களில் ஆய்வு செய்யும்போது பாலிதீன் தாள்கள் இருப்பதை கண்டுபிடித்தால், அவற்றை பறிமுதல் செய்வதுடன், உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டப்படி நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

## சிவகங்கை மாவட்ட விவசாயிகளுக்கு ரூ. 253 கோடி பயிர்க்கடன்: அமைச்சர்

சிவகங்கை மாவட்டத்தில் 76,644 விவசாயிகளுக்கு ரூ.253.72 கோடி வட்டியில்லா பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது என கூட்டுறவுத்துறை அமைச்சர் செல்லூர் கே.ராஜூ தெரிவித்தார்.

தேவகோட்டையில் திங்கள்கிழமை நடைபெற்ற 62 ஆவது தேசிய கூட்டுறவு வார விழாவில் அவர் பேசியது: கூட்டுறவு சங்கங்கள் ஏழை எளிய மக்களுக்காகவே பாடுபடக்கூடியது. சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 76,644 விவசாயிகளுக்கு ரூ.253.72 கோடியில் வட்டியில்லா பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் 123 தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மாற்றுத்திறனாளிகளுக்கு கடன் கொடுப்பதில் தமிழக அரசு சாதனை படைத்துள்ளது. இதனால் கூட்டுறவு சங்கங்கள் மக்களிடம் மிகுந்த நம்பிக்கையை பெற்றுள்ளது என்றார்.

முன்னதாக அவர் சிவகங்கை மாவட்ட அளவில் 302 பயனாளர்களுக்கு ரூ.175.23 லட்சம் கடன் தொகைக்கான காசோலைகளை வழங்கினார். கூட்டறவு வார விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு மக்களவை உறுப்பினர் பி.ஆர்.செந்தில்நாதன் பரிசுகளை வழங்கினார்.

சிவகங்கை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத் தலைவர் சண்முகம், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத் தலைவரும் சிவகங்கை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைத் தலைவருமான உமாதேவன், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் குணசேகரன், சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் முருகானந்தம் ஆகியோர் வாழ்த்திப்பேசினர். தேவகோட்டை நகர்மன்ற தலைவர் சுமித்ரா ரவிக்குமார், காரைக்குடி நகர்மன்ற தலைவர் கற்பகம் இளங்கோ உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் சு.மலர்விழி தலைமை வகித்தார். கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் செல்வக்குமரன் திட்ட விளக்கவுரையாற்றினார். சிவகங்கை மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தலைவர் ராமச்சந்திரன் வரேவற்றார். காரைக்குடி சரக துணை பதிவாளர் மாரீஸ்வரன் நன்றி கூறினார்.

2 மணி நேரம் காத்திருப்பு: காலை ஒன்பது மணிக்கு தொடங்க வேண்டிய நிகழ்ச்சி காலதாமதமாக காலை 11.15 மணியளவில் தொடங்கியது. இதனால் பயனாளர்கள் காத்திருந்து மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகினர்.

**நெல் பயிரில் குலை நோய் தாக்குதலைத் தடுக்க வேளாண் அதிகாரி யோசனை**

திருவாடானை பகுதியில் நெல் பயிர்களைத் தாக்கிய குலை நோயைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி ஆலோசனை தெரிவித்தார்.

ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை அருகே அஞ்சுகோட்டை, வாணியேந்தல், டி.கிளியூர் பகுதிகளில் குலை நோய்த் தாக்குதல் பரவலாக உள்ளது. இதைத் தடுக்க மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகளை குறித்து திருவாடானை வேளாண் உதவி இயக்குநர் நாகராஜ் கூறியது:

குலை நோய்த் தாக்குதலுக்கு உள்ளான பயிரின் இலை, தண்டு, கணுப்பகுதி, கழுத்துபகுதி, கதிர் ஆகியவை பூஞ்சணத்தால் தாக்கபட்டிருக்கும். சாம்பல் நிற புள்ளிகள் காணப்படும். தீவிர தாக்குதல் ஏற்பட்ட பயிர்கள் முழுவதும் கருகியது போன்ற தோற்றமளிக்கும். இதையே குலை நோய் என்கிறோம். இந்நோய் தாக்கிய பயிர்களில் கதிர் வந்தவுடன் பயிர்கள் சாய்ந்து விடும்.

மேலாண்மை முறைகள்: வயல் மற்றும் வரப்புகளில் உள்ள களைகளை அகற்ற வேண்டும். பயிரில் தூர் கட்டும் முன்பு நோய்த் தாக்குதல் ஏற்பட்டு இருந்தால்

லிட்டருக்கு கார்பன்டாசிம் 1 கிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும். தழைச்சத்து உரம் அளித்தலை தாமதாமாகச் செய்ய வேண்டும். நோய்த் தோன்றும் போது ஹெக்டேருக்கு டிரைசைக்ளோசோல் 400கிராம் தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

பூஞ்சானக்கொல்லி மருந்துகளான கார்பென்டாசிம் 200கிராம் அல்லது டிரைசைக்ளோசோல் 120 கிராம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை நோய் தென்பட்டவுடன் ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். பூச்சிக்கொல்லி மருந்துகளுக்குப் பதிலாக சூடோமோனஸ் புளொரசன்ஸ் என்ற எதிர் உயிர் பாக்டீரியத்தை 1 கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்யலாம்.

இது தவிர நோய் அறிகுறிகள் தென்பட்டவுடன் ஏக்கருக்கு 1கிலோ சூடாமோனஸ் புளொரசன்ஸ் பாக்டீரியத்தை 200லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பதால் நோயைக் கட்டுப்படுத்தலாம். நோய் எதிர் உயிர் பாக்டீரியாவான சூடோமோனஸை கண்டிப்பாக ரசாயன மருந்துகளுடன் கலந்து இடக்கூடாது. உயிர் உரங்களுடன் இட வேணடும் என தெரிவித்தார்.

### அயோடின் உப்பு: விழிப்புணர்வுக் கருத்தரங்கம்

கோபி ஸ்ரீ குருகுலம் மேல்நிலைப் பள்ளி மாணவ நுகர்வோர் மன்றம், கோபி வட்ட நுகர்வோர் பாதுகாப்பு மையம் இணைந்து நடத்திய உலக அயோடின் பற்றாக்குறை குறைபாடுகள் தடுப்பு தின விழிப்புணர்வு கருத்தரங்கம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பள்ளி முதல்வர் கே.ஆர்.ரங்கராஜ் தலைமை வகித்தார். பொது சுகாதாரம், நோய் தடுப்புத் துறையின் துணை இயக்குநர் டாக்டர் பாலுசாமி கருத்தரங்கை தொடக்கி வைத்துப் பேசியதாவது:

அயோடின் சத்தின் அவசியம் குறித்தும், அயோடின் உப்பு பயன்படுத்துவதன் அவசியம் குறித்தும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும். அயோடின் சத்து பற்றாக்குறையால் பல்வேறு குறைகள் ஏற்படுகின்றது. இந்த குறைகளைத் தடுக்க மத்திய, மாநில அரசு உப்பின் வாயிலாக அயோடின் சத்தை அளிக்க முடிவு செய்து உணவுக்காக விற்பனை செய்யப்படும் உப்பில் கட்டாயம் அயோடின் கலக்கப்பட்டிருக்க வேண்டும் என உணவுப் பாதுகாப்பு, தரங்கள் சட்டத்தின் வாயிலாக சட்டமாக்கப்பட்டு

அனைவரையும் உணவிற்கு அயோடின் கலந்த உப்பை பயன்படுத்தக் கோரி விழிப்புணர்வு பிரசாரத்தையும் செய்து வருகின்றது. அறிவு வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்துக்கும் அவசியம் அயோடின் சத்து. இந்த சத்தை அயோடின் உப்பின் வாயிலாக பெற வேண்டும் என்பதே அரசின் நோக்கம் என்றார்.

பள்ளியின் துணை முதல்வர் நாகராஜன் வரவேற்றார். ஒருங்கிணைப்பாளர் லதா நன்றி கூறினார்.

**அயோடின் உப்பு: விழிப்புணர்வுக் கருத்தரங்கம்**

கோபி ஸ்ரீ குருகுலம் மேல்நிலைப் பள்ளி மாணவ நுகர்வோர் மன்றம், கோபி வட்ட நுகர்வோர் பாதுகாப்பு மையம் இணைந்து நடத்திய உலக அயோடின் பற்றாக்குறை குறைபாடுகள் தடுப்பு தின விழிப்புணர்வு கருத்தரங்கம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பள்ளி முதல்வர் கே.ஆர்.ரங்கராஜ் தலைமை வகித்தார். பொது சுகாதாரம், நோய் தடுப்புத் துறையின் துணை இயக்குநர் டாக்டர் பாலுசாமி கருத்தரங்கை தொடக்கி வைத்துப் பேசியதாவது:

அயோடின் சத்தின் அவசியம் குறித்தும், அயோடின் உப்பு பயன்படுத்துவதன் அவசியம் குறித்தும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும். அயோடின் சத்து பற்றாக்குறையால் பல்வேறு குறைகள் ஏற்படுகின்றது. இந்த குறைகளைத் தடுக்க மத்திய, மாநில அரசு உப்பின் வாயிலாக அயோடின் சத்தை அளிக்க முடிவு செய்து உணவுக்காக விற்பனை செய்யப்படும் உப்பில் கட்டாயம் அயோடின் கலக்கப்பட்டிருக்க வேண்டும் என உணவுப் பாதுகாப்பு, தரங்கள் சட்டத்தின் வாயிலாக சட்டமாக்கப்பட்டு அனைவரையும் உணவிற்கு அயோடின் கலந்த உப்பை பயன்படுத்தக் கோரி விழிப்புணர்வு பிரசாரத்தையும் செய்து வருகின்றது. அறிவு வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்துக்கும் அவசியம் அயோடின் சத்து. இந்த சத்தை அயோடின் உப்பின் வாயிலாக பெற வேண்டும் என்பதே அரசின் நோக்கம் என்றார்.

பள்ளியின் துணை முதல்வர் நாகராஜன் வரவேற்றார். ஒருங்கிணைப்பாளர் லதா நன்றி கூறினார்.

**மஞ்சள்சந்தை நிலவரம்**

ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்

தனிவிரலி:ரூ.8,569-ரூ.9,894.

தனிக்கிழங்கு:ரூ.8,030-ரூ.8,964.

கூட்டுறவுச்சங்கம்

தனிவிரலி:ரூ.8,720-ரூ.9,889.

தனிக்கிழங்கு:ரூ.8,300-ரூ.9,099.

வெளிச்சந்தை

தனிவிரலி:ரூ.6,385-ரூ.9,869.

தனிக்கிழங்கு:5,799-ரூ.8,896.

தினகரன்

**என்இசிசி நிர்ணய விலைக்கு சம்மதம் திருவனந்தபுரத்துக்கு மீண்டும் முட்டை சப்ளை துவக்கம்**




நாமக்கல்: நாமக்கல் கோழிப்பண்ணையில் உற்பத்தியாகும் முட்டையில் 50 சதவீதம், கேரளா மாநிலத்தில் விற்பனை செய்யப்படுகிறது. திருவனந்தபுரத்தில் உள்ள பெரிய முட்டை வியாபாரிகள், நாமக்கல் என்.இ.சி.சி நிர்ணய விலையில் இருந்து, 10 காசு குறைத்து கொடுக்க முடிவு செய்தனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, நாமக்கல் பண்ணையாளர்கள் திருவனந்தபுரத்துக்கு முட்டை அனுப்புவதை கடந்த வாரம் நிறுத்தினர். இது குறித்து நடந்த பேச்சுவார்த்தையில் என்.இ.சி.சி நிர்ணய விலைக்கே வாங்க, திருவனந்தபுரம்

என்.இ.சி.சி வியாபாரிகள் ஒப்புக்கொண்டனர். இதையடுத்து நேற்று முன்தினம் முதல் திருவனந்தபுரத்துக்கு நாமக்கல்லில் இருந்து முட்டை அனுப்பப்படுகிறது. நேற்று முன்தினம் 10 லோடு முட்டை அனுப்பி வைக்கப்பட்டது. ஒரு லோடுக்கு 1.20 லட்சம் முட்டைகள் கொண்டு செல்லப்பட்டது.

இது குறித்து தமிழ்நாடு முட்டைக்கோழி பண்ணையாளர்கள் சம்மேளன துணைத்தலைவர் வாங்கிலி சுப்ரமணியம் கூறுகையில், ''தற்போது வடமாநிலங்களில் முட்டையின் தேவை அதிகரிப்பதால் முட்டை விலை தொடர்ந்து உயர்கிறது. இந்த நேரத்தில் நஷ்டத்துக்கு விற்பதை எந்த பண்ணையாளரும் விரும்பவில்லை. எனவே, திருவனந்தபுரத்துக்கு முட்டை சப்ளை நிறுத்தப்பட்டது. தற்போது வியாபாரிகள் என்.இ.சி.சி நிர்ணயம் செய்யும் விலையை தருவதாக கூறியதால், முட்டை அனுப்பப்பட்டு வருகிறது'' என்றார்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 85 அடி**




மேட்டூர் : காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்து வரும் மழையால், மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் வினாடிக்கு 8,023 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று வினாடிக்கு 8,081 கனஅடியாக இருந்தது. அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு வினாடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. அணையின் நீர்மட்டம் நேற்று முன்தினம் 84.58 அடியாக இருந்தது, நேற்று 85.15 அடியாக உயர்ந்தது. அணையில் நீர் இருப்பு 47.28 டிஎம்சி. இதே போல் ஒகேனக்கல் காவிரியில் நேற்று முன்தினம் வினாடிக்கு

6,100 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று வினாடிக்கு 7,100 கனஅடியாக அதிகரித்தது. சீரமைப்பு பணிகள், தொடர்மழை உள்ளிட்டவைகளால் மெயின் அருவியில் குளிக்கவும், பரிசல் இயக்கவும் விதிக்கப்பட்ட தடை 14வது நாளாக நீடித்தது.

**தொடர் மழை எதிரொலி தக்காளி விலை கிடுகிடு கிலோ 60க்கு விற்பனை**

புதுச்சேரி, : தமிழகம், புதுவையில் கடந்த ஒரு வாரமாக நீடித்த அடைமழை காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. சென்னை நகரம் வெள்ளத்தில் தத்தளிப்பதால் அத்திவாசிய பொருட்களின் விலை உயர்ந்து வருகிறது. புதுவையில் பெரிய மார்க்கெட்டிற்கு பெங்களூர் உள்ளிட்ட வெளிமாநிலங்களிலிருந்து காய்கறிகள் லாரிகளில் இறக்குமதியாவது வழக்கம்.மழை காரணமாக பல்வேறு இடங்களில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதால் காய்கறி லாரிகள் வரத்து பாதியாக குறைந்தது. இதன் காரணமாக காய்கறி விலை கடுமையாக உயர்ந்துள்ளது. புதுவையில் ரூ.40க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ தக்காளி நேற்று ரூ.54 ஆக உயர்ந்துள்ளது. சில்லரை கடைகளில் இது ரூ.60 வரை விற்கப்பட்டது. உழவர்சந்தையில் கத்திரிக்காய் முதல் ரகம் 50க்கும், வெண்டை ரூ.26க்கும் கொடுக்கப்படுகிறது.

அவரைக்காய் ரூ.60க்கும், கருணை ரூ.30க்கும் விற்கப்படுகின்றன. இதுதவிர கோவக்காய், சேப்பக்கிழங்கு, பச்சைமிளகாய் ஆகியவற்றின் விலையும் உயர்ந்துள்ளன. மழை ஓய்வு சகஜநிலை திரும்பியவுடன் படிப்படியாக காய்கறி விலை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**மழை பாதிப்பால் 6 ஆடு, 1 மாடு சாவு**

திருவெறும்பூர். : திருவெறும்பூர் பகுதியில் தொடர் மழை பாதிப்பில் 6 ஆடு, ஒரு மாடு பலியாயின. திருவெறும்பூர் பகுதியில் தொடர் மழை காரணமாக பழங்கனாங்குடியை சேர்ந்த தேமுதிக ஒன்றிய செயலாளர் மகேந்திரன்

என்பவரது 3 ஆடுகள் மழைக்கு இறந்தன. இதுபற்றி விஏஓ மற்றும் கால்நடைத்துறை அலுவலர்களுக்கு தகவல் கொடுத்தும் வராததால் அதில் 2 ஆடுகளை ஆற்றில் தூக்கி வீசப்பட்டது. மேலும் அதே பகுதியை சேர்ந்த ஜெயபால், ராஜ்குமார், பழனிசாமி ஆகியோரது ஆடுகளும் இறந்து போனது. அதனை நேற்று கால்நடை மருத்துவர்கள் மருத்துவ பரிசோதனை செய்து புதைத்தனர். அதேபோல் கூத்தைப்பார் கீழத்தெருவை சேர்ந்த தமிழரசன் என்பவருக்கு சொந்தமான காளை மாடு மழையில் இறந்தது. இதனையும் கால்நடைத்துறை மருத்துவர்கள் மருத்துவ பரி சோதனை செய்து புதைத்தனர்.

திருவெறும்பூர். : திருவெறும்பூர் பகுதியில் தொடர் மழை பாதிப்பில் 6 ஆடு, ஒரு மாடு பலியாயின. திருவெறும்பூர் பகுதியில் தொடர் மழை காரணமாக பழங்கனாங்குடியை சேர்ந்த தேமுதிக ஒன்றிய செயலாளர் மகேந்திரன் என்பவரது 3 ஆடுகள் மழைக்கு இறந்தன. இதுபற்றி விஏஓ மற்றும் கால்நடைத்துறை அலுவலர்களுக்கு தகவல் கொடுத்தும் வராததால் அதில் 2 ஆடுகளை ஆற்றில் தூக்கி வீசப்பட்டது. மேலும் அதே பகுதியை சேர்ந்த ஜெயபால், ராஜ்குமார், பழனிசாமி ஆகியோரது ஆடுகளும் இறந்து போனது. அதனை நேற்று கால்நடை மருத்துவர்கள் மருத்துவ பரிசோதனை செய்து புதைத்தனர். அதேபோல் கூத்தைப்பார் கீழத்தெருவை சேர்ந்த தமிழரசன் என்பவருக்கு சொந்தமான காளை மாடு மழையில் இறந்தது. இதனையும் கால்நடைத்துறை மருத்துவர்கள் மருத்துவ பரி சோதனை செய்து புதைத்தனர்.

## 9,500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் பிசான சாகுபடிக்காக கருப்பாநதி அணை திறப்பு

கடையநல்லூர், : கடையநல்லூர் பகுதியில் பிசான சாகுபடியை முன்னிட்டு கருப்பாநதி அணையை கலெக்டர் கருணாகரன் திறந்து வைத்தார். இதன்மூலம் 9,500 ஏக்கர் விவசாய நிலங்கள் பயனடையும்.நெல்லை மாவட்டத்தில் கடந்த 2 வாரங்களாக வடகிழக்கு பருவமழை தீவிரமாக பெய்து வருகிறது. இதனால் மாவட்டத்தில் உள்ள அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. கடையநல்லூர் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள கருப்பாநதி அணை, அதன் முழு கொள்ளளவான 72 அடியை எட்டி நிரம்பி

வழிந்தது.

கருப்பாநதி அணை நீர் மூலம் சுரண்டை, வீரசிகாமணி, ஊர்மேல்அழகியான், இடைகால், கிருஷ்ணாபுரம், சங்கனாப்பேரி உட்பட 10க்கும் மேற்பட்ட ஊர்களில் உள்ள சுமார் 10 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.இந்நிலையில், தற்போது பிசான பருவ சாகுபடியை முன்னிட்டு, மாவட்ட கலெக்டர் கருணாகரன் நேற்று கருப்பாநதி அணையில் இருந்து தண்ணீரை திறந்து விட்டார். தற்போது அணையில் இருந்து 25 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. வரும் நாட்களில் தண்ணீரின் அளவு அதிகரிக்கப்படும். தொடர்ந்து 105 நாட்கள் தண்ணீர் திறக்கப்படும் என்றும், இந்த நீரின் மூலம் 9 ஆயிரத்து 500 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். நிகழ்ச்சியில் எம்பிக்கள் முத்துக்கருப்பன், விஜிலா சத்யானந்த், நெல்லை ஆவின் இயக்குனர் பொய்கை மாரியப்பன், கூட்டுறவு சங்கத் தலைவர் கிட்டுராஜா, அட்மா தலைவர் வசந்தம் முத்துப்பாண்டி, நெல்லை வேளாண்மைத் துறை இணை இயக்குனர் பெருமாள், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் காளிராஜ், உதவி செயற்பொறியாளர் மாரியப்பன், இளநிலை பொறியாளர் பாலசுப்பிரமணியன், தென்காசி ஆர்டிஓ வெங்கடேஷ், கடையநல்லூர் தாசில்தார் நாகராஜன், ஆர்ஐ இசக்கித்துரை உட்பட பலர் உடனிருந்தனர்.

**உசிலம்பட்டி பகுதியில் களைகட்டுது வெண்டை விவசாயம் ரூ.20 ஆயிரம் செலவு; ரூ.1 லட்சம் வரவு**

உசிலம்பட்டி, : ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் செலவு செய்து, ரூ.ஒரு லட்சம் வரை வருமானம் கிடைப்பதால், உசிலம்பட்டி பகுதியில் வெண்டைக்காய் சாகுபடி செய்த விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.மதுரை மாவட்டம், உசிலம்பட்டியை சுற்றியுள்ள ஏ.ராமநாதபுரம், வடுகபட்டி, கீழசெம்பட்டி, மேலசெம்பட்டி, ஆரியபட்டி உள்ளிட்ட 15 கிராமங்களில் விவசாயிகள் தங்களது நிலங்களில் வெண்டைக்காய், கத்தரிக்காய், தக்காளி, பாகற்காய் போன்ற

காய்கறிகளை சாகுபடி செய்கின்றனர். கடந்த சில மாதங்களாக போதிய மழை இல்லாததால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது.இந்நிலையில், பெரும்பாலான விவசாயிகள் தங்களது நிலங்களில் வெண்டைக்காய் சாகுபடி செய்தனர். இங்குள்ள வேளாண் அலுவலகத்தில் யு.எஸ். ரகம், சாம்ராட் ஆகிய வெண்டை விதைகளை வாங்கி ஏக்கருக்கு 4 கிலோ விதை வீதம் நடவு செய்தனர். உழவு, மருந்து தெளித்தல், உரமிடுதல், களையெடுப்பு என விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் வரை செலவு செய்தனர். தற்போது பெய்த மழை காரணமாக வெண்டைக்காய் நல்ல விளைச்சல் கண்டுள்ளது. நடவு செய்த 45 நாளில் அறுவடைக்கு வந்துள்ளது. விளைச்சல் கண்ட நாளில் இருந்து 35 முறை வெண்டைக்காய் பறிக்கலாம். ஒவ்வொரு முறையின் போதும் 150 கிலோ முதல் 200 கிலோ வரை கிடைக்கிறது. அதிக விளைச்சல் இருப்பதுடன் நல்ல விலையும் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து ராமநாதபுரம் விவசாயி ராமன் கூறுகையில், ‘கடந்த சில மாதங்களாக வெண்டைக்காய் கிலோ ரூ.10க்கு விற்பனையானது. தற்போது நல்ல விளைச்சல் இருக்கும் நிலையில் கிலோ ரூ.20 முதல் ரூ.25 வரை விற்பனையாகிறது. இது மகிழ்ச்சியாக உள்ளது. ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் செலவு செய்தோம். ஆனால் ரூ.1 லட்சம் வரை லாபம் கிடைக்கிறது. ஐயப்ப சீசன் விரைவில் துவங்க உள்ளதால் மேலும் வெண்டைக்காய் விலை உயர வாய்ப்புள்ளது. நான் 3 ஏக்கரில் வெண்டை சாகுபடி செய்தேன். அறுவடை முடிந்த நிலையில் மீண்டும் அதே வயலில் வெண்டைக்காய் சாகுபடி செய்ய முடிவு செய்துள்ளேன்’ என்றார்.

**மதுரையில் கொட்டியது மழை**

மதுரை, : மதுரையில் கடந்த சில நாட்களாக வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. வட மாவட்டங்களில் மழை வெளுத்துவாங்கிய போதிலும் இங்கு மழை இல்லாமல் இருந்தது. இந்நிலையில், நேற்று மாலை கொட்டத் தொடங்கிய கனமழை இரவு வரை நீடித்தது. இதனால், சாலை ஒரங்களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஒடியது. பெரியார் பஸ் ஸ்டாண்ட், ஆரப்பாளையம், கிழக்கு வெளி வீதி போன்ற பள்ளமான பகுதிகளில் தண்ணீர் தேங்கி

குளம்போல காட்சி அளித்தது. சிம்மக்கல், கிழக்கு வெளிவீதி, பெரியார் பஸ் நிலையம், தெற்கு வெளிவீதி ஆகிய பகுதிகளில் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டது. மாட்டுத்தாவணி, பாண்டிகோயில் செல்லும் சாலை மழை நீர் தேங்கியுள்ளதால் வாகன ஓட்டிகள் மிகவும் சிரம்மபட்டனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## கோவை வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தராக இராமசாமி மீண்டும் பொறுப்பேற்பு



கோவை வேளாண் பல்கலைக் கழகத்தின் 12-வது துணை வேந்தராக கு. இராமசாமி நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர், வேளாண் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக ஏற்கெனவே பொறுப்பு வகித்தவர் ஆவார். கடந்த ஆகஸ்ட் 26-ம் தேதியுடன் பதவிக் காலம் நிறைவு பெற்றதை அடுத்து புதிய துணைவேந்தரை நியமிக்கும் பணி நடைபெற்று வந்தது.

தமிழக ஆளுநர் ரோசய்யா, புதிய துணைவேந்தரை நியமிப்பதற்கு, ஊழல் கண்காணிப்புத் துறை முன்னாள் இயக்குநர் வேதநாயகம் தலைமையில் குழுவை அமைத்து உத்தரவிட்டார். இதையடுத்து, கடந்த அக்டோபர் 12-ம் தேதி வரை பெறப்பட்ட 52 விண்ணப்பங்கள் மீது வேதநாயகம் தலைமையிலான குழு ஆய்வு செய்தது.

இதன்படி, அக்குழுவின் பரிந்துரையின் பேரில் வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தராக ஏற்கெனவே பொறுப்பு வகித்த கு.இராமசாமி மீண்டும் தேர்வு செய்யப்பட்டார். இதனை அதிகார பூர்வமாக ஆளுநர் கே.ரோசய்யா நேற்றுமுன்தினம் அறிவித்தார். இதையடுத்து, துணை வேந்தராக கு.இராமசாமி நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

## சூரிய மின் உற்பத்தி 3,645 மெகாவாட் அளவிற்கு உயரும்

நாட்டின் மொத்த சூரிய மின் உற்பத்தி 2016 ஆம் ஆண்டிற்குள் 3,645 மெகா வாட்டாக உயரும் என எரிசக்தி ஆலோசனை நிறுவனமான மெர்காம் கேபிடல் குரூப் தெரிவித்துள்ளது.

2015 ஆம் ஆண்டில் 2,150 மெகா வாட் அளவிற்கு சூரிய உற்பத்தி இருக்கும் எனவும் 2016 ஆம் ஆண்டில் இது 3,645 மெகா வாட் அளவிற்கு உயரும் என கணித்துள்ளதாக மெர்காம் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளது.

இது குறித்து மெர்காம் கேபிடல் குரூப் சிஇஓ மற்றும் துணை நிறுவனர் ராஜ் பிரபு கூறுகையில், “சமீபத்தில் எரிசக்தி தொடர்பான முக்கியமான கொள்கைகள் அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து ஏலம் மற்றும் பத்திரங்கள் மூலம் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது” என்று கூறினார்.

நீண்ட தாமதத்திற்கு பின்பு என்டிபிசி நிறுவனம் ஜவர்ஹலால் நேரு சூரிய திட்டத்தின் கீழ் 3,000 மெகாவாட் மின் உற்பத்திக்கான ஏலத்தை அறிவித்துள்ளது.

## சென்னையில் 50 தற்காலிக பண்ணை பசுமை கடைகள்: காய்கறி விலை உயர்வை கட்டுப்படுத்த முதல்வர் நடவடிக்கை




காய்கறிகளின் விலைகளை கட்டுப்படுத்தும் வகையில், சென்னை நகரில் 50 கூடுதல் காய்கறி விற்பனை மையங்களை தற்காலிகமாக திறக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான செய்திக் குறிப்பில், “வெளிச் சந்தையில் அதிலும் குறிப்பாக நகர்ப்புறங்களில் காய்கறி விலைகளை கட்டுக்குள் வைத்திடவும் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைத்திடவும், நுகர்வோர்களுக்கு நியாயமான நிலையில் தரமான காய்கறிகள் கிடைத்திடும் வகையிலும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் இயங்கி வருகின்றன.

கூட்டுறவு சங்கங்கள் கிருஷ்ணகிரி, திண்டுக்கல், நீலகிரி, விழுப்புரம், நாமக்கல் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் காய்கறி பயிரிடும் விவசாயிகளிடமிருந்து காய்கறிகளை நேரடியாக கொள்முதல் செய்து பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் காய்கறிகளை விற்பனை செய்து வருகின்றன.

தற்போது தமிழ்நாடு முழுவதும் உள்ள 58 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இதுவன்றி, இரண்டு நகரும் பண்ணை பசுமை கடைகள் சென்னை மாநகரில் செயல்பட்டு வருகின்றன.

பண்ணை பசுமை கடைகளில் இதுவரை சுமார் 33 கோடி ரூபாய் மதிப்பிலான 11,385 மெட்ரிக் டன் காய்கறிகள் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

கடந்த சில நாட்களாக தமிழ்நாட்டில் பெய்து வரும் கன மழையின் காரணமாக சென்னை நகருக்கு காய்கறிகள் வரத்து குறைந்துள்ளது.

எனவே, காய்கறிகளின் விலை உயர்ந்து வருகிறது. காய்கறிகளின் விலைகளை கட்டுப்படுத்தும் வகையில், சென்னை நகரில் 50 கூடுதல் காய்கறி விற்பனை மையங்களை தற்காலிகமாக திறக்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி, தற்போது சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் 42 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளுடன் தற்காலிகமாக கூடுதலாக 50 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் துவங்கப்படும்.

எனவே, சென்னை மாநகரில், 92 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளில் காய்கறிகள் விற்பனை செய்யப்படும். பொது மக்கள் அதிக அளவில் பயன்படுத்தும் காய்கறிகளான வெங்காயம், தக்காளி, உருளைக்கிழங்கு, கத்திரிக்காய், பீட்ரூட் மற்றும் புடலங்காய் ஆகிய காய்கறிகள் இந்தக் கடைகளில் விற்பனை செய்யப்படும்.


**சென்னை நகரில் தற்காலிகமாக துவங்கப்படவுள்ள 50 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் விவரம் பின்வருமாறு:**

துரைப்பாக்கம் மற்றும் மீனம்பாக்கம் டீயூசிஸ் அங்காடிகள், தாடண்டன் நகர், சாஸ்திரி நகர், விருகம்பாக்கம், சின்மயா நகர், திருநகர் (வடபழனி), மன்னார் முதலியார் தெரு (வடபழனி), பேரூர்-காரப்பாக்கம், கணேஷ் நகர் (கிழக்கு தாம்பரம்), கௌரிவாக்கம் (கிழக்கு தாம்பரம்), சந்தோஷபுரம் (கிழக்கு தாம்பரம்), இராமகிருஷ்ணன் தெரு (மேற்கு தாம்பரம்), வசந்தம் காலனி (வில்லிவாக்கம்), திருமங்கலம் (அண்ணாநகர் மேற்கு), ஏ.கே.சாமி நகர் (அயனாவரம்), பி.பி. கார்டன் (அமைந்தகரை), கிருஷ்ணாபுரம் (அம்பத்தூர்), புரசைவாக்கம், மணலி, எத்ராஜ்சாமி தெரு (எருக்கன்சேரி), முத்தமிழ் நகர் (கொடுங்கையூர்), பஜனைகோயில் தெரு (எர்ணாவூர்), பாரதியார் தெரு (எர்ணாவூர்), பழைய வண்ணாரப்பேட்டை, ராயபுரம், அருணாசலேஸ்வரர் தெரு (புது வண்ணாரப்பேட்டை), பூண்டி தங்கம்மாள் தெரு (புது வண்ணாரப்பேட்டை), தண்டையார் நகர், சௌகார்பேட்டை, தண்டையார் பேட்டை, கும்மாளம்மன் கோயில் தெரு (தண்டையார் பேட்டை), ஐசிஎப் பேருந்து நிலையம், சைதாப்பேட்டை, நங்கநல்லூர், ஆதம்பாக்கம், மேற்கு

மாம்பலம், ரங்கைய்யா கார்டன் தெரு (மைலாப்பூர்), கிழக்கு அபிராமபுரம் (மைலாப்பூர்) ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மற்றும் அண்ணா நகர் மேற்கு, அசோக் நகர், ஆர்.கே.மடம் சாலை, இந்திரா நகர், ஆழ்வார்பேட்டை, தாம்பரம், கே.கே.நகர் மேற்கு, ராயப்பேட்டை, திருவான்மியூர், ஆற்காடு சாலை, போரூர் ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக பல்பொருள் அங்காடிகள்.

மாலைமலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

**தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் இன்று மழை பெய்யும்: வானிலை ஆய்வு மையம் தகவல்**



சென்னை, நவ.18-

வடகிழக்கு பருவமழை தமிழகம் முழுவதும் பரவலாக பெய்து வருகிறது. கடந்த சில தினங்களுக்கு முன்பு தென்மேற்கு வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக தமிழ்நாட்டில் பெரும்பாலான இடங்களிலும், உள் மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும் நல்ல மழை பெய்தது.

குறிப்பாக சென்னை, திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சீபுரம் ஆகிய வட மாவட்டங்களில் கனமழை பெய்துள்ளது. இந்த நிலையில் தென்மேற்கு வங்க கடலில் நிலைகொண்டிருந்த தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதி, அங்கிருந்து நகர்ந்து ஆந்திராவை நோக்கி சென்றது.

தற்போது அந்த தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதி, ஆந்திரா மற்றும் வடதமிழக வங்ககடல் பகுதியில் நிலைகொண்டிருப்பதாகவும், இதனால் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் இன்று (புதன்கிழமை) மழை பெய்யும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் நிருபர்களிடம் கூறியதாவது:-

வங்ககடலில் நேற்று (நேற்று முன்தினம்) நிலைகொண்டிருந்த தீவிர காற்றழுத்த தாழ்வுபகுதி, தெற்கு ஆந்திரா மற்றும் வடதமிழக வங்க கடல் பகுதியில் நீடிக்கிறது. அது தற்போது வடக்கு, வடமேற்கு திசைநோக்கி நகருவதற்கு வாய்ப்பு உள்ளது.இதன் காரணமாக, அடுத்த 24 மணி நேரத்தில் (இன்று), தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரு சில இடங்களிலும், வட மாவட்டமான திருவள்ளூரில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யும். சென்னையை பொறுத்தவரையில், வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் ஆங்காங்கே மழை பெய்யவும் வாய்ப்பு இருக்கிறது. இனி வரக்கூடிய நாட்களில் மழையின் அளவு படிப்படியாக குறையும்.

அடுத்த நிகழ்வு எதுவும் இதுவரை ஏற்படவில்லை. வடகிழக்கு பருவமழை காலங்களில் பெய்யக்கூடிய மழை வழக்கம்போல் பெய்யும். ஆந்திர கடல் பகுதியில் தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதி நீடிப்பதால், வட தமிழக மீனவர்கள் கடலுக்குள் செல்லும் போது கவனத்துடன் இருக்க வேண்டும்.

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:-

திருத்தணி 9 செ.மீ., சோழவந்தான் 8 செ.மீ., பள்ளிப்பட்டு, சிட்டம்பட்டி, அரக்கோணம், ஸ்ரீபெரும்புதூர் தலா 7 செ.மீ., காட்டுக்குப்பம், செங்கல்பட்டு தலா 6 செ.மீ., பூந்தமல்லி, வாடிப்பட்டி தலா 5 செ.மீ., சிவகங்கை, மதுரை (தெற்கு), சென்னை மீனம்பாக்கம், திருவதனை, எண்ணூர், தாமரைப்பாக்கம் ஆகிய இடங்களில் தலா 4 செ.மீ. மழை பெய்துள்ளது.இதற்கிடையே இந்தியாவின் தெற்கு தீபகற்ப பகுதியில் (தமிழ்நாடு) பல இடங்களில் வருகிற 22 மற்றும் 23-ந் தேதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று புனே வானிலை மையம் அறிவித்து உள்ளது.இந்தியாவின் மேற்கு பகுதியில் புதிதாக ஒரு தாழ்வு நிலை உருவாகி இருப்பதாகவும், இமயமலையின் மேற்கு பிராந்தியத்தில் வருகிற 22-ந் தேதி முதல் இதன் தாக்கம் இருக்கும் என்றும் அது கூறியுள்ளது.

**சென்னையில் காய்கறி விலையை கட்டுப்படுத்த கூடுதலாக 50 விற்பனை மையங்கள் திறப்பு!**

**சென்னை:** காய்கறிகளின் விலைகளை கட்டுப்படுத்தும் வகையில், சென்னை நகரில் 50 கூடுதல் காய்கறி விற்பனை மையங்களை தற்காலிகமாக திறக்க முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.



இது தொடர்பாக தமிழக அரசு இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "கடந்த சில நாட்களாக தமிழ்நாட்டில் பெய்து வரும் கன மழையின் காரணமாக சென்னை நகருக்கு காய்கறிகள் வரத்து குறைந்துள்ளது. எனவே, காய்கறிகளின் விலை உயர்ந்து வருகிறது. காய்கறிகளின் விலைகளை கட்டுப்படுத்தும் வகையில், சென்னை நகரில் 50 கூடுதல் காய்கறி விற்பனை மையங்களை தற்காலிகமாக திறக்க முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதன்படி, தற்போது சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் 42 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளுடன் தற்காலிகமாக கூடுதலாக 50 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் துவங்கப்படும்.எனவே, சென்னை மாநகரில், 92 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளில் காய்கறிகள் விற்பனை செய்யப்படும். பொது மக்கள் அதிக அளவில் பயன்படுத்தும் காய்கறிகளான வெங்காயம், தக்காளி, உருளைக்கிழங்கு, கத்திரிக்காய், பீட்ரூட் மற்றும் புடலங்காய் ஆகிய காய்கறிகள் இந்தக் கடைகளில் விற்பனை செய்யப்படும்.சென்னை நகரில் தற்காலிகமாக துவங்கப்படவுள்ள 50 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் விவரம்: துரைப்பாக்கம் மற்றும் மீனம்பாக்கம் டீயூசிஸ் அங்காடிகள், தாடண்டன் நகர், சாஸ்திரி நகர், விருகம்பாக்கம், சின்மயா நகர், திருநகர் (வடபழனி), மன்னார் முதலியார் தெரு (வடபழனி), பேரூர்-காரப்பாக்கம், கணேஷ் நகர் (கிழக்கு தாம்பரம்), கௌரிவாக்கம் (கிழக்கு தாம்பரம்), சந்தோஷபுரம் (கிழக்கு தாம்பரம்), இராமகிருஷ்ணன் தெரு (மேற்கு

தாம்பரம்), வசந்தம் காலனி (வில்லிவாக்கம்), திருமங்கலம் (அண்ணாநகர் மேற்கு), ஏ.கே.சாமி நகர் (அயனாவரம்), பி.பி. கார்டன் (அமைந்தகரை), கிருஷ்ணாபுரம் (அம்பத்தூர்), புரசைவாக்கம், மணலி, எத்ராஜ்சாமி தெரு (எருக்கன்சேரி), முத்தமிழ் நகர் (கொடுங்கையூர்), பஜனைகோயில் தெரு (எர்ணாவூர்), பாரதியார் தெரு (எர்ணாவூர்), பழைய வண்ணாரப்பேட்டை, ராயபுரம், அருணாசலேஸ்வரர் தெரு (புது வண்ணாரப்பேட்டை), பூண்டி தங்கம்மாள் தெரு (புது வண்ணாரப்பேட்டை), தண்டையார் நகர், சௌகார்பேட்டை, தண்டையார் பேட்டை, கும்மாளம்மன் கோயில் தெரு (தண்டையார் பேட்டை), ஐசிஎப் பேருந்து நிலையம், சைதாப்பேட்டை, நங்கநல்லூர், ஆதம்பாக்கம், மேற்கு மாம்பலம், ரங்கைய்யா கார்டன் தெரு (மைலாப்பூர்), கிழக்கு அபிராமபுரம் (மைலாப்பூர்) ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மற்றும் அண்ணா நகர் மேற்கு, அசோக் நகர், ஆர்.கே.மடம் சாலை, இந்திரா நகர், ஆழ்வார்பேட்டை, தாம்பரம், கே.கே.நகர் மேற்கு, ராயப்பேட்டை, திருவான்மியூர், ஆற்காடு சாலை, போரூர் ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக பல்பொருள் அங்காடிகள். தற்போது தமிழ்நாடு முழுவதும் உள்ள 58 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதுவன்றி, இரண்டு நகரும் பண்ணை பசுமை கடைகள் சென்னை மாநகரில் செயல்பட்டு வருகின்றன. பண்ணை பசுமை கடைகளில் இதுவரை சுமார் 33 கோடி ரூபாய் மதிப்பிலான 11,385 மெட்ரிக் டன் காய்கறிகள் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன" என்று கூறப்பட்டுள்ளது.

## காய்கறிகள் விலை உச்சத்துக்கு செல்கிறது மழையால் கீரை, புதினா, கொத்தமல்லி வரத்து இல்லை



சென்னை,

மழையால் வரத்து குறைந்ததால், காய்கறிகள் விலை உச்சத்துக்கு செல்கிறது. கீரை, புதினா, கொத்தமல்லி போன்றவை வரத்து இல்லை என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

<u>கோயம்பேடு மார்க்கெட்</u>

தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருவதால் காய்கறிகள் வரத்து குறைந்து விலை அதிகரித்துள்ளது. தக்காளி, முருங்கைக்காய், பீன்ஸ், அவரைக்காய், கத்தரிக்காய், வெண்டைக்காய், கேரட் ஆகியவற்றின் விலை உச்சத்தை நோக்கி செல்கிறது. இதுகுறித்து சென்னை கோயம்பேடு மார்க்கெட் வியாபாரிகள் சங்க ஆலோசகர் சவுந்தரராஜன் கூறியதாவது:–

மழையால் காய்கறிகள் வரத்து பெருமளவில் குறைந்துள்ளது. குறிப்பாக, நாளொன்றுக்கு 60 முதல் 70 லாரிகளில் வந்து கொண்டிருந்த தக்காளி, தற்போது 30 முதல் 35 லாரிகளில் தான் வருகிறது. இதன் காரணமாக அதன்

விலை உயர்ந்துள்ளது. முருங்கைக்காய், பீன்ஸ், அவரைக்காய், கேரட் ஆகியவையும் வரத்து பாதியாக குறைந்து விலை அதிகரித்துள்ளது.

சில தினங்களுக்கு முன்பு ஒரு கிலோ ரூ.15 முதல் ரூ.25 வரை விற்பனை செய்யப்பட்ட கத்தரிக்காய் வரத்தும் பாதியாக குறைந்துள்ளது. இதனால் அதன் விலை ஒரு கிலோ ரூ.50–ஆக உயர்ந்துள்ளது.

<u>விலை நிலவரம்</u>

மழை குறைந்து காய்கறிகள் விளைச்சல்–வரத்து அதிகரிக்கும்பட்சத்தில் விலை குறைவதற்கு வாய்ப்பு உள்ளது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம் (கிலோவுக்கு) வருமாறு:–

உருளைக்கிழங்கு – ரூ.20 முதல் ரூ.22, பல்லாரி – ரூ.50, பீன்ஸ் – ரூ.50, கேரட் – ரூ.40, நூக்கல் – ரூ.30, சவ்சவ் – ரூ.30, பீட்ரூட் – ரூ.25, முட்டைக்கோஸ் – ரூ.15 முதல் ரூ.20, மிளகாய் – ரூ.20 முதல் ரூ.30, இஞ்சி – ரூ.50 முதல் ரூ.80, சேப்பங்கிழங்கு – ரூ.30, சேனைக்கிழங்கு – ரூ.30, வெண்டைக்காய் – ரூ.40, அவரைக்காய் – ரூ.50, கோவைக்காய் – ரூ.20, பாகற்காய் – ரூ.30, முருங்கைக்காய் – ரூ.80, தக்காளி – ரூ.70 முதல் ரூ.80 வரை, சாம்பார் வெங்காயம் – ரூ.50 முதல் ரூ.60 வரை, காலிபிளவர் – ரூ.30, புடலங்காய் – ரூ.25, பீர்க்கங்காய் – ரூ.20, கத்தரிக்காய் – ரூ.50, வாழைக்காய் (காய் ஒன்று) – ரூ.3, தேங்காய் (காய் ஒன்று) – ரூ.18.

இவ்வாறு அவர் கூறினார்.

<u>கீரை கட்டுகள்</u>

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு நேற்று கீரை கட்டுகள், புதினா, கொத்தமல்லி வரத்து இல்லை என்று வியாபாரிகள் தெரிவித்தனர். இதுகுறித்து கீரை வியாபாரிகள் சங்க பொதுச்செயலாளர் கோவிந்தராஜ் கூறும்போது, ‘‘10 லாரிகளில் வந்து கொண்டிருந்த கீரை கட்டுகள், மழையால் ஒரு லாரி மட்டுமே வந்தது. இன்று (நேற்று) அந்த ஒரு லாரியும் வரவில்லை. இதனால் கீரை வியாபாரிகள் ஏமாற்றத்துடனேயே திரும்பினார்கள். சிறிய வாகனங்களில் வந்த ஒரு சில கீரைக்கட்டுகளின் விலையும் அதிகமாகவே இருந்தது’’ என்றார்.

காய்கறிகள் கோயம்பேடு மார்க்கெட் விலையை விட சில்லறை கடைகளில் இருமடங்கு அதிகமாக விற்பனை செய்யப்படுகிறது. சில்லறை கடைகளில் பீன்ஸ் – ரூ.80 முதல் ரூ.100 வரை, கேரட் – ரூ.60 முதல் ரூ.80 வரை, மிளகாய் – ரூ.50, கத்தரிக்காய் – ரூ.80 முதல் ரூ.100 வரை, பீட்ரூட்– ரூ.40, அவரைக்காய் – ரூ.80 முதல் ரூ.100 வரை, முருங்கைகாய் – ரூ.80 முதல் ரூ.100 வரை, வெண்டைக்காய் – ரூ.40 முதல் ரூ.50 வரை, பல்லாரி – ரூ.50, சாம்பார் வெங்காயம் – ரூ.80, பாகற்காய் – ரூ.40 முதல் ரூ.50 வரை விற்கப்படுகிறது.

மீன் விலையும் உயர்ந்தது

சென்னை மீன் மார்க்கெட்டுகளில் மீன் வரத்து இல்லாததால் அதன் விலையும் உயர்ந்துள்ளது. இதுகுறித்து அகில இந்திய மீனவர் சங்க அமைப்பு செயலாளர் (தமிழ்நாடு) தி.பன்னீர்செல்வம் கூறியதாவது:–

மழையால் மீனவர்கள் சில நாட்களாக கடலுக்கு செல்லவில்லை. இதனால் மீன் வரத்து குறைந்து, அதன் விலை அதிகரித்துள்ளது. மீன்களின் விலை கிலோவுக்கு ரூ.20 முதல் ரூ.100 வரை உயர்ந்துள்ளது. மீன்களின் விலை நிலவரம் (கிலோவுக்கு, அடைப்புக்குறிக்குள் பழைய விலை) வருமாறு:–

வஞ்சிரம் – ரூ.500(ரூ.400), கருப்பு வவ்வால் – ரூ.420(ரூ.320), கிழங்கா – ரூ.280(ரூ.250), நெத்திலி – ரூ.160(ரூ.140), அயிலா – ரூ.120(ரூ.100), மத்தி – ரூ.80(ரூ.60), பாறை – ரூ.250(ரூ.200), சீலா – ரூ.260(ரூ.230), கடம்பா – ரூ.160(ரூ.130), காரல் – ரூ.60(ரூ.30), நண்டு – ரூ.140(ரூ.100), கடல் இறால் – ரூ.350(ரூ.300). இவ்வாறு அவர் கூறினார்.

## மழை வெள்ளம் சூழ்ந்ததால் அம்பத்தூர் பால்பண்ணையில் பால் உற்பத்தி முழுமையாக நிறுத்தம்



சென்னை,

மழை வெள்ளம் சூழ்ந்ததால் அம்பத்தூர் பால்பண்ணையில் பால் உற்பத்தி முழுமையாக நிறுத்தப்பட்டது. இதையொட்டி ஆவின் நிர்வாகம் மாற்று ஏற்பாடு செய்துள்ளது.

அம்பத்தூர் பால்பண்ணையில் முழுமையாக நிறுத்தம்

கடந்த சில நாட்களாக பெய்த மழையையொட்டி அம்பத்தூரில் உள்ள ஆவின் பால் உற்பத்தி நிலையம் முழுவதும் தண்ணீர் 5 அடி உயரம் வரை நிற்பதால் எந்திரங்கள் அனைத்தும் தண்ணீரில் மூழ்கி உள்ளன. இந்த பால் உற்பத்தி நிலையத்தில் வழக்கமாக தினமும் 3 லட்சத்து 35 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது.

மழையையொட்டி இந்த பால் உற்பத்தி நிலையத்தில் 2 நாட்களுக்கு முன்பு 2 லட்சத்து 35 ஆயிரம் லிட்டர் பால் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது. மழை தண்ணீர் அதிகமாக இருப்பதால் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் உள்ள தனியார் நிர்வாகம் பல மூடிவிட்டன. நேற்று முன்தினம் முதல் அம்பத்தூர் பால் உற்பத்தி நிலையத்தில் பால் உற்பத்தி முழுமையாக நிறுத்தப்பட்டது.

மாற்று ஏற்பாடு

இங்கு உற்பத்தி செய்யவேண்டிய பால் விழுப்புரம், காக்களூர், சோழிங்கநல்லூர், மாதவரம் பால்பண்ணைகளுக்கு பிரித்து அனுப்பப்பட்டது. அவர்கள் வழக்கமாக உற்பத்தி செய்யப்படும் பாலைவிட கூடுதலாக அம்பத்தூர் பால்பண்ணையில் இருந்து வினியோகம் செய்ய வேண்டிய 42 ரூட்டுகளில் டேங்கர்களில் செல்லப்படும் பாலையும் சேர்த்து உற்பத்தி செய்து வருகிறார்கள்.

பொதுமக்களுக்கு எந்த வகையிலும் பால் சப்ளையில் பாதிப்பு ஏற்பட்டு விடக்கூடாது என்ற முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவின்பேரில் ஆவின் நிர்வாக இயக்குனர் சுனில் பாலிவால் மற்றும் அதிகாரிகள், ஊழியர்கள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

கார்டு தாரர்களுக்கு பால் வினியோகம்

சென்னை நகரைப் பொருத்தவரை 11 லட்சம் லிட்டர் பால் வினியோகம் செய்யப்படும்.

இதில் 7½ லட்சம் லிட்டர் பால் கார்டு தாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. கடைகள் மற்றும் சில்லறை விற்பனை செய்யப்படும் 3½ லட்சம் லிட்டர் பால்

விற்பனையில் தான் இந்த வினியோக பாதிப்பு ஏற்பட்டு விட்டது. கார்டு தாரர்களுக்கு தங்கு தடைஇன்றி பால் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது குறிப்பிடத்தக்கது. அம்பத்தூர் பால்பண்ணையில் மீண்டும் பால் உற்பத்தி தொடங்க இன்னும் ஒரு சில நாட்கள் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த தகவலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மேட்டுப்பாளையம் பகுதியில் தொடர் மழையால் புள்ளிநோய் தாக்கி கறிவேப்பிலை நாசம் விவசாயிகள் கவலை



மேட்டுப்பாளையம்

மேட்டுப்பாளையம் பகுதியில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக அப்பகுதியில் பயிரிடப்பட்டுள்ள கறிவேப்பிலை செடிகளில் புள்ளிநோய் தாக்கி உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

<u>தொடர் மழை</u>

கோவை மாவட்டத்தில் மேட்டுப்பாளையம், தோலம்பாளையம், காரமடை, பெள்ளாதி, தாயானூர், வெள்ளியங்காடு ஆகிய பகுதிகளில் சுமார் 30–க்கும் மேற்பட்ட கிராமங்களில் 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கறிவேப்பிலை செடிகள் பயிரிடப்பட்டுள்ளன.

காரமடை, தேரம்பாளையம் உள்ளிட்ட இடங்களில் கறிவேப்பிலை மொத்தமாக கொள்முதல் செய்யப்பட்டு தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும் கேரளா, கர்நாடகா போன்ற வெளி மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

பொதுவாக நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் நல்ல விலைக்கு போகும் கறிவேப்பிலை தற்போது பெய்து வரும் தொடர் மழையினால் புள்ளிநோய் தாக்கி முற்றிலும் கருகும் நிலை உருவாகி உள்ளது. நோய் தாக்கத்தால் கறிவேப்பிலை செடிகள் பல நாசமாகி விட்டன.

நிவாரணம் வழங்க வேண்டும்

இதுகுறித்து விவசாயி ஜெயக்குமார் என்பவர் கூறியதாவது:–

புள்ளிநோய் தாக்கத்தினால் இலைகளில் பூச்சிகள் தோன்றி, சேதப்படுத்துவதால் இலைகள் காய்ந்து தரம் குறைவாக உள்ளன. இதனால் வியாபாரிகள் கறிவேப்பிலையை வாங்க ஆர்வம் காட்டாததால் தோட்டத்திலேயே ஆள் கூலி கொடுத்து வெட்டி அகற்றும் அவல நிலை உருவாகி உள்ளது. இந்த நோய் தாக்கத்தினால் கடந்த வாரம் ஒரு கிலோ ரூபாய் 25–க்கு விற்பனையான கறிவேப்பிலை தற்போது ஒரு கிலோ ரூபாய் 7–க்கு மட்டுமே விற்பனை ஆகிறது.

தொடர்மழை காரணமாக ஏற்பட்ட இந்த பிரச்சினையால் நஷ்டத்தை சந்தித்து வரும் விவசாயிகளுக்கு அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்.

இவ்வாறு விவசாயி ஜெயக்குமார் கூறினார்.

## கோவையில் மீண்டும் மழை இன்னும் 150 மி.மீட்டர் பெய்ய வாய்ப்பு



கோவை

கோவையில் 4 நாட்களுக்கு பிறகு நேற்று மீண்டும் மழை பெய்தது. இன்னும் 150 மில்லி மீட்டர் மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக கோவை வேளாண் பல்கலைக்கழக காலநிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு பருவமழை

கோவை மாவட்டத்தில் கடந்த ஏப்ரல் மாதம் முதல் கோடை வெயில் கொளுத்த தொடங்கினாலும், கோடையை குளிர்விக்க அவ்வப்போது மழை தொடர்ச்சியாக பெய்தது. இது 262 மில்லி மீட்டர் அளவு ஆகும். இது கடந்த ஆண்டு பெய்த கோடைமழையை விட அதிகம். இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்தநிலையில் ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் தென்மேற்கு பருவ மழை எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை. தற்போது கடந்த அக்டோபர் மாதம் 28–ந் தேதி தொடங்கிய, வடகிழக்கு பருவமழை தமிழகத்தில் பரவலாக பெய்து வருகிறது. இதேபோல் கோவையிலும் தொடர்ச்சியாக மழை பெய்து வந்தது. கடந்த 4 நாட்களாக மழை பெய்யவில்லை. புறநகர் பகுதிகளில் மட்டும் லேசாக மழை தூறியது.

கோவையில் மீண்டும் பெய்தது

கோவை மாவட்டத்தில் நேற்று மீண்டும் மழை பெய்தது. சுமார் 12 மணியளவில் லேசாக ஆங்காங்கே மழை தூறியது. அதன்பிறகு பிற்பகல் 2½ மணிக்கு பெய்யத்தொடங்கிய மழை, தீவிரமடைந்து 3¼ வரை நீடித்தது. 45 நிமிடங்கள் பலத்த மழை பெய்தது.

இது குறித்து தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக காலநிலை ஆராய்ச்சி மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

கோவை மாவட்டத்தில் நடப்பாண்டில் தென்மேற்கு பருவமழை ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் மாதம் வரை 210 மி.மீட்டர் பெய்ய வேண்டும். ஆனால் 130 மி.மீட்டர் அளவுதான் மழை பெய்தது. தென்மேற்கு பருவமழையை தொடர்ந்து வடகிழக்கு பருவமழை நவம்பர் மாதத்தில் தொடங்கியது.

150 மில்லி மீட்டர் பெய்ய வாய்ப்பு

இந்த மழை தொடர்ந்து டிசம்பர் மாத கடைசிவரை பெய்யும். இதுவரை 225 மில்லி மீட்டர் மழை பெய் துள்ளது. இன்னும் 150 மில்லி மீட்டர் அளவுக்கு மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. கடந்த ஆண்டு வடகிழக்கு கோவை மாவட்டத்தில் 372 மில்லி மீட்டர் மழை பெய்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் இன்று மழை பெய்யும்; வானிலை ஆய்வு மையம் தகவல்




சென்னை,

தெற்கு ஆந்திரா, வடதமிழக வங்க கடல் பகுதியில் தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதி நிலைகொண்டிருப்பதால், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் இன்று (புதன்கிழமை) மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு பருவமழ

வடகிழக்கு பருவமழை தமிழகம் முழுவதும் பரவலாக பெய்து வருகிறது. கடந்த சில தினங்களுக்கு முன்பு தென்மேற்கு வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக தமிழ்நாட்டில் பெரும்பாலான இடங்களிலும், உள் மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும் நல்ல மழை பெய்தது.

குறிப்பாக சென்னை, திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சீபுரம் ஆகிய வட மாவட்டங்களில் கனமழை பெய்துள்ளது. இந்த நிலையில் தென்மேற்கு வங்க கடலில் நிலைகொண்டிருந்த தீவிர காற்றழுத்த

தாழ்வுப்பகுதி, அங்கிருந்து நகர்ந்து ஆந்திராவை நோக்கி சென்றது.

தற்போது அந்த தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதி, ஆந்திரா மற்றும் வடதமிழக வங்ககடல் பகுதியில் நிலைகொண்டிருப்பதாகவும், இதனால் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் இன்று (புதன்கிழமை) மழை பெய்யும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஒரு சில இடங்களில் மழை பெய்யும்

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் நிருபர்களிடம் கூறியதாவது:-வங்ககடலில் நேற்று (நேற்று முன்தினம்) நிலைகொண்டிருந்த தீவிர காற்றழுத்த தாழ்வுபகுதி, தெற்கு ஆந்திரா மற்றும் வடதமிழக வங்க கடல் பகுதியில் நீடிக்கிறது. அது தற்போது வடக்கு, வடமேற்கு திசைநோக்கி நகருவதற்கு வாய்ப்பு உள்ளது.இதன் காரணமாக, அடுத்த 24 மணி நேரத்தில் (இன்று), தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரு சில இடங்களிலும், வட மாவட்டமான திருவள்ளூரில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யும்.

மீனவர்கள் கவனத்துடன்...

சென்னையை பொறுத்தவரையில், வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் ஆங்காங்கே மழை பெய்யவும் வாய்ப்பு இருக்கிறது. இனி வரக்கூடிய நாட்களில் மழையின் அளவு படிப்படியாக குறையும்.

அடுத்த நிகழ்வு எதுவும் இதுவரை ஏற்படவில்லை. வடகிழக்கு பருவமழை காலங்களில் பெய்யக்கூடிய மழை வழக்கம்போல் பெய்யும். ஆந்திர கடல் பகுதியில் தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதி நீடிப்பதால், வட தமிழக மீனவர்கள் கடலுக்குள் செல்லும் போது கவனத்துடன் இருக்க வேண்டும்.

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:-

மழை அளவு

திருத்தணி 9 செ.மீ., சோழவந்தான் 8 செ.மீ., பள்ளிப்பட்டு, சிட்டம்பட்டி, அரக்கோணம், ஸ்ரீபெரும்புதூர் தலா 7 செ.மீ., காட்டுக்குப்பம், செங்கல்பட்டு தலா 6 செ.மீ., பூந்தமல்லி, வாடிப்பட்டி தலா 5 செ.மீ., சிவகங்கை, மதுரை (தெற்கு), சென்னை மீனம்பாக்கம், திருவதனை, எண்ணூர், தாமரைப்பாக்கம் ஆகிய இடங்களில் தலா 4 செ.மீ. மழை பெய்துள்ளது.

2 நாட்கள் மழை

இதற்கிடையே இந்தியாவின் தெற்கு தீபகற்ப பகுதியில் (தமிழ்நாடு) பல இடங்களில் வருகிற 22 மற்றும் 23-ந் தேதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று புனே வானிலை மையம் அறிவித்து உள்ளது.

இந்தியாவின் மேற்கு பகுதியில் புதிதாக ஒரு தாழ்வு நிலை உருவாகி இருப்பதாகவும், இமயமலையின் மேற்கு பிராந்தியத்தில் வருகிற 22-ந் தேதி முதல் இதன் தாக்கம் இருக்கும் என்றும் அது கூறியுள்ளது.

**விலையை கட்டுப்படுத்த சென்னையில் மேலும் 50 மலிவு விலை காய்கறி கடைகள்; ஜெயலலிதா உத்தரவு**



சென்னை,

காய்கறி விலையை கட்டுப்படுத்த, சென்னையில் மேலும் 50 மலிவு விலை காய்கறி கடைகளை திறக்க முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

தற்காலிக கடைகள்

கடந்த சில நாட்களாக தமிழ்நாட்டில் பெய்து வரும் கனமழையின் காரணமாக, சென்னை நகருக்கு காய்கறிகள் வரத்து குறைந்துள்ளது. எனவே, காய்கறிகளின் விலை உயர்ந்து வருகிறது. காய்கறிகளின் விலைகளை கட்டுப்படுத்தும் வகையில், சென்னை நகரில் 50 கூடுதல் காய்கறி விற்பனை மையங்களை தற்காலிகமாக திறக்க முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி, தற்போது சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் 42 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளுடன், தற்காலிகமாக கூடுதலாக 50 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் தொடங்கப்படும். எனவே, சென்னை மாநகரில், 92 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளில் காய்கறிகள் விற்பனை

செய்யப்படும். பொதுமக்கள் அதிக அளவில் பயன்படுத்தும் காய்கறிகளான வெங்காயம், தக்காளி, உருளைக்கிழங்கு, கத்திரிக்காய், பீட்ரூட் மற்றும் புடலங்காய் ஆகிய காய்கறிகள் இந்தக் கடைகளில் விற்பனை செய்யப்படும்.

எந்த இடத்தில்?

சென்னை நகரில் தற்காலிகமாக தொடங்கப்படவுள்ள 50 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் விவரம் பின்வருமாறு:-

துரைப்பாக்கம் மற்றும் மீனம்பாக்கம் டீயூசிஸ் அங்காடிகள், தாடண்டன் நகர், சாஸ்திரி நகர், விருகம்பாக்கம், சின்மயா நகர், திருநகர் (வடபழனி), மன்னார் முதலியார் தெரு (வடபழனி), பேரூர்-காரப்பாக்கம், கணேஷ் நகர் (கிழக்கு தாம்பரம்), கவுரிவாக்கம் (கிழக்கு தாம்பரம்), சந்தோஷபுரம் (கிழக்கு தாம்பரம்), ராமகிருஷ்ணன் தெரு (மேற்கு தாம்பரம்), வசந்தம் காலனி (வில்லிவாக்கம்), திருமங்கலம் (அண்ணாநகர் மேற்கு), ஏ.கே.சாமி நகர் (அயனாவரம்), பி.பி.கார்டன் (அமைந்தகரை), கிருஷ்ணாபுரம் (அம்பத்தூர்), புரசைவாக்கம், மணலி, எத்ராஜ்சாமி தெரு (எருக்கன்சேரி), முத்தமிழ் நகர் (கொடுங்கையூர்), பஜனைகோவில் தெரு (எர்ணாவூர்), பாரதியார் தெரு (எர்ணாவூர்), பழைய வண்ணாரப்பேட்டை, ராயபுரம், அருணாசலேஸ்வரர் தெரு (புது வண்ணாரப்பேட்டை), பூண்டி தங்கம்மாள் தெரு (புது வண்ணாரப்பேட்டை), தண்டையார் நகர், சவுகார்பேட்டை, தண்டையார் பேட்டை, கும்மாளம்மன் கோவில் தெரு (தண்டையார் பேட்டை), ஐ.சி.எப். பேருந்து நிலையம், சைதாப்பேட்டை, நங்கநல்லூர், ஆதம்பாக்கம், மேற்கு மாம்பலம், ரங்கைய்யா கார்டன் தெரு (மைலாப்பூர்), கிழக்கு அபிராமபுரம் (மைலாப்பூர்) ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவு நியாய விலைக்கடைகள் மற்றும் அண்ணா நகர் மேற்கு, அசோக் நகர், ஆர்.கே.மடம் சாலை, இந்திரா நகர், ஆழ்வார்பேட்டை, தாம்பரம், கே.கே.நகர் மேற்கு, ராயப்பேட்டை, திருவான்மியூர், ஆற்காடு சாலை, போரூர் ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக பல்பொருள் அங்காடிகள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## காய்கறிகள் விலை உச்சத்துக்கு செல்கிறது; மழையால் கீரை, புதினா, கொத்தமல்லி வரத்து இல்லை



சென்னை,

மழையால் வரத்து குறைந்ததால், காய்கறிகள் விலை உச்சத்துக்கு செல்கிறது. கீரை, புதினா, கொத்தமல்லி போன்றவை வரத்து இல்லை என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

கோயம்பேடு மார்க்கெட்

தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருவதால் காய்கறிகள் வரத்து குறைந்து விலை அதிகரித்துள்ளது. தக்காளி, முருங்கைக்காய், பீன்ஸ், அவரைக்காய், கத்தரிக்காய், வெண்டைக்காய், கேரட் ஆகியவற்றின் விலை உச்சத்தை நோக்கி செல்கிறது. இதுகுறித்து சென்னை கோயம்பேடு மார்க்கெட்

வியாபாரிகள் சங்க ஆலோசகர் சவுந்தரராஜன் கூறியதாவது:-

மழையால் காய்கறிகள் வரத்து பெருமளவில் குறைந்துள்ளது. குறிப்பாக, நாளொன்றுக்கு 60 முதல் 70 லாரிகளில் வந்து கொண்டிருந்த தக்காளி, தற்போது 30 முதல் 35 லாரிகளில் தான் வருகிறது. இதன் காரணமாக அதன் விலை உயர்ந்துள்ளது. முருங்கைக்காய், பீன்ஸ், அவரைக்காய், கேரட் ஆகியவையும் வரத்து பாதியாக குறைந்து விலை அதிகரித்துள்ளது.

சில தினங்களுக்கு முன்பு ஒரு கிலோ ரூ.15 முதல் ரூ.25 வரை விற்பனை செய்யப்பட்ட கத்தரிக்காய் வரத்தும் பாதியாக குறைந்துள்ளது. இதனால் அதன் விலை ஒரு கிலோ ரூ.50-ஆக உயர்ந்துள்ளது.

விலை நிலவரம்

மழை குறைந்து காய்கறிகள் விளைச்சல்-வரத்து அதிகரிக்கும்பட்சத்தில் விலை குறைவதற்கு வாய்ப்பு உள்ளது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம் (கிலோவுக்கு) வருமாறு:-

உருளைக்கிழங்கு - ரூ.20 முதல் ரூ.22, பல்லாரி - ரூ.50, பீன்ஸ் - ரூ.50, கேரட் - ரூ.40, நூக்கல் - ரூ.30, சவ்சவ் - ரூ.30, பீட்ரூட் - ரூ.25, முட்டைக்கோஸ் - ரூ.15 முதல் ரூ.20, மிளகாய் - ரூ.20 முதல் ரூ.30, இஞ்சி - ரூ.50 முதல் ரூ.80, சேப்பங்கிழங்கு - ரூ.30, சேனைக்கிழங்கு - ரூ.30, வெண்டைக்காய் - ரூ.40, அவரைக்காய் - ரூ.50, கோவைக்காய் - ரூ.20, பாகற்காய் - ரூ.30, முருங்கைக்காய் - ரூ.80, தக்காளி - ரூ.70 முதல் ரூ.80 வரை, சாம்பார் வெங்காயம் - ரூ.50 முதல் ரூ.60 வரை, காலிபிளவர் - ரூ.30, புடலங்காய் - ரூ.25, பீர்க்கங்காய் - ரூ.20, கத்தரிக்காய் - ரூ.50, வாழைக்காய் (காய் ஒன்று) - ரூ.3, தேங்காய் (காய் ஒன்று) - ரூ.18.இவ்வாறு அவர் கூறினார்.
கீரை கட்டுகள்

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு நேற்று கீரை கட்டுகள், புதினா, கொத்தமல்லி வரத்து இல்லை என்று வியாபாரிகள் தெரிவித்தனர். இதுகுறித்து கீரை வியாபாரிகள் சங்க பொதுச்செயலாளர் கோவிந்தராஜ் கூறும்போது, ''10 லாரிகளில் வந்து கொண்டிருந்த கீரை கட்டுகள், மழையால் ஒரு லாரி மட்டுமே வந்தது. இன்று (நேற்று) அந்த ஒரு லாரியும் வரவில்லை. இதனால் கீரை வியாபாரிகள் ஏமாற்றத்துடனேயே திரும்பினார்கள். சிறிய வாகனங்களில் வந்த ஒரு சில கீரைக்கட்டுகளின் விலையும் அதிகமாகவே இருந்தது'' என்றார்.

காய்கறிகள் கோயம்பேடு மார்க்கெட் விலையை விட சில்லறை கடைகளில் இருமடங்கு அதிகமாக விற்பனை செய்யப்படுகிறது. சில்லறை கடைகளில் பீன்ஸ் - ரூ.80 முதல் ரூ.100 வரை, கேரட் - ரூ.60 முதல் ரூ.80 வரை, மிளகாய் - ரூ.50, கத்தரிக்காய் - ரூ.80 முதல் ரூ.100 வரை, பீட்ரூட்- ரூ.40, அவரைக்காய் - ரூ.80 முதல் ரூ.100 வரை, முருங்கைகாய் - ரூ.80 முதல் ரூ.100 வரை, வெண்டைக்காய் - ரூ.40 முதல் ரூ.50 வரை, பல்லாரி - ரூ.50, சாம்பார் வெங்காயம் - ரூ.80, பாகற்காய் - ரூ.40 முதல் ரூ.50 வரை விற்கப்படுகிறது.

மீன் விலையும் உயர்ந்தது

சென்னை மீன் மார்க்கெட்டுகளில் மீன் வரத்து இல்லாததால் அதன் விலையும் உயர்ந்துள்ளது. இதுகுறித்து அகில இந்திய மீனவர் சங்க அமைப்பு செயலாளர் (தமிழ்நாடு) தி.பன்னீர்செல்வம் கூறியதாவது:-

மழையால் மீனவர்கள் சில நாட்களாக கடலுக்கு செல்லவில்லை. இதனால் மீன் வரத்து குறைந்து, அதன் விலை அதிகரித்துள்ளது. மீன்களின் விலை கிலோவுக்கு ரூ.20 முதல் ரூ.100 வரை உயர்ந்துள்ளது. மீன்களின் விலை நிலவரம் (கிலோவுக்கு, அடைப்புக்குறிக்குள் பழைய விலை) வருமாறு:-

வஞ்சிரம் - ரூ.500(ரூ.400), கருப்பு வவ்வால் - ரூ.420(ரூ.320), கிழங்கா - ரூ.280(ரூ.250), நெத்திலி - ரூ.160(ரூ.140), அயிலா - ரூ.120(ரூ.100), மத்தி - ரூ.80(ரூ.60), பாறை - ரூ.250(ரூ.200), சீலா - ரூ.260(ரூ.230), கடம்பா -

ரூ.160(ரூ.130), காரல் - ரூ.60(ரூ.30), நண்டு - ரூ.140(ரூ.100), கடல் இறால் - ரூ.350(ரூ.300).இவ்வாறு அவர் கூறினார்.

## கனமழை பெய்தும் நிரம்பாத எஸ்.வாழவந்தி ஏரி கருவேல மரங்களை அகற்ற விவசாயிகள் கோரிக்கை



மோகனூர் அருகே கனமழை பெய்தும் எஸ்.வாழவந்தி ஏரி நிரம்பவில்லை. எனவே இந்த ஏரியை தூர்வாரி ஏரியில் உள்ள கருவேல மரங்களை அகற்ற வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர். எஸ்.வாழவந்தி ஏரி

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகா மோகனூர் ஒன்றியத்திற்கு உட்பட்டது எஸ்.வாழவந்தி ஊராட்சி. இங்கு பொதுப்பணித் துறைக்கு பாத்தியப்பட்ட பெரிய ஏரி ஒன்று சுமார் 445 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. இந்த ஏரி முழுவதும் சீமக்கருவேல மரங்களாக வளர்ந்து உள்ளன. சுமார் 10 ஏக்கர் நிலம் மட்டும்தான் காலி இடமாக உள்ளது. அதுவும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் சுத்தம் செய்யப்பட்டதுதான்.

தற்போது கடந்த சில நாட்களாக இந்த பகுதியில் கனத்த மழை பெய்தபோதும் எஸ்.வாழவந்தி ஏரிக்கு தண்ணீர் வரத்தே இல்லை. இவ்வளவு பெரிய ஏரியில் அங்கு பெய்த மழைத்தண்ணீர் மட்டும்தான் தேங்கி உள்ளது. இந்த ஏரிக்கு

தண்ணீர் வரும் பாதைகள் ஆக்கிரமிக்கப்பட்டு உள்ளதாலும், சரியான வகையில் நீர்வரத்து பாதைகள் தூர்வாராமலும் உள்ளதால்தான் தண்ணீர் வரவில்லை. அதுமட்டுமின்றி ஏரியின் பெரும்பாலான இடங்களில் சமூக விரோதிகள் மண்களை வெட்டிய எடுத்து உள்ளதால் ஆங்காங்கே பெரிய பெரிய பள்ளங்களாக காணப்படுகிறது.

கருவேல மரங்களை அகற்ற கோரிக்கை

சிறிய, சிறிய குழிகளில் கூட மழைதண்ணீர் தேங்கி உள்ள நிலையில் இவ்வளவு பெரிய ஏரியில் தண்ணீர் இல்லாதது அந்தப்பகுதி விவசாயிகளிடம் பெரிய ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. இதுபற்றி அந்த பகுதி விவசாயிகள் கூறியதாவது:- எஸ்.வாழவந்தி ஏரி சுமார் 445 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்த ஏரியில் தண்ணீர் இருந்தால், எஸ்.வாழவந்தி, சின்னக்கரசம்பாளையம், மேலப்பட்டி, கே.ராசாம்பாளையம் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் உயரும். இதனால் சுமார் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயம் செய்யலாம்.

ஆனால் இந்த ஏரிக்கு தண்ணீர் வருவதற்கான வழிகள் இல்லாமலும், வழியில் ஒரு ஓடையில் போதிய பராமரிப்பு இல்லாமல் ஆக்கிரமிக்கப்பட்டு உள்ளதாலும் தண்ணீர் வருவதில்லை. எனவே மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி இந்த ஏரியை பார்வையிட்டு தக்க நடவடிக்கை எடுத்து தண்ணீர் நிரந்தரமாக வரவழிவகை செய்ய வேண்டும். மேலும் ஏரி முழுவதும் தூர்வாரி வளர்ந்து இருக்கும் சீமை கருவேல மரங்களையும் அப்புறப்படுத்த வேண்டும். இவ்வாறு விவசாயிகள் தெரிவித்தனர்.

## கூடலூர் பகுதியில் காலநிலை மாற்றம் தேயிலை மகசூல் பாதிப்பு விவசாயிகள் கவலை



கூடலூர்

கூடலூர் பகுதியில் காலநிலை மாற்றத்தின் காரணமாக பச்சை தேயிலை மகசூல் பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

விளைச்சல் அதிகரிப்பு

நீலகிரி மாவட்டத்தின் முக்கிய தொழிலாக தேயிலை விவசாயம் உள்ளது. தற்போது பச்சை தேயிலைக்கு போதிய விலை கிடைக்க வில்லை. இதனால் தேயிலை விவசாயிகள் மிகுந்த பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர். கடந்த ஜூன் மாதம் போதிய மழை பெய்யாமல் மிக காலதாமதமாக பெய்தது. இருப்பினும் பருவமழை சரிவர கிடைக்க வில்லை. அதே நேரத்தில் மழையும், வெயிலும் என காலநிலை மாறி காணப்பட்டதால் பச்சை தேயிலை விளைச்சல் அதிகரித்தது.

இதனால் தேயிலை தொழிற்சாலைகளுக்கு பச்சை தேயிலை வரத்து அதிகமாக இருந்தது. ஆனால் எதிர்பார்த்த அளவுக்கு போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர். இந்த நிலையில் தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமாக பெய்து வருகிறது. நீலகிரி மாவட்டத்திலும் பரவலான மழை காணப்படுகிறது.

பச்சை தேயிலை மகசூல் பாதிப்பு

கூடலூர் பகுதியில் கடந்த 1 வாரத்துக்கும் மேலாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படுகிறது. அவ்வப்போது சாரல் மழை பெய்து வருகிறது. இதேபோல் ஊட்டிக்கு இணையாக கடுங்குளிர் நிலவுகிறது. சூரிய வெளிச்சம் இன்மை, கடுங்குளிர் என காலநிலையில் ஏற்பட்ட காரணத்தால் பச்சை தேயிலை மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:–

சூரிய வெளிச்சம் இன்மை, கடுங்குளிர், மேக மூட்டம் என காலநிலையில் அடிக்கடி மாற்றம் ஏற்படுவதால் தேயிலை விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. வெயிலும், மழையும் மாறி, மாறி கிடைத்தால் தேயிலை மகசூல் அதிகரிக்கும். அதே நேரத்தில் பச்சைதேயிலைக்கு போதிய விலை கிடைக்காததால் தொழிலாளர்களுக்கு கூலி வழங்க முடியவில்லை. எனவே நாளுக்கு நாள் தேயிலை விவசாயம் நலிவடைந்து வருகிறது. இதற்கு மத்திய–மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## கூடலூர் நகராட்சி பகுதியில் மழையால் பாதிப்பு ஏற்படுவதை தடுக்க அதிகாரிகள் குழு ஆய்வு



கூடலூர்

கூடலூர் நகராட்சி பகுதியில் மழைக்காலத்தில் பாதிப்பு ஏற்படுவதை தடுக்க அனைத்து துறையை சேர்ந்த அதிகாரிகள் குழு ஆய்வு செய்தது.

<u>வெள்ளப்பெருக்கு</u>

தமிழகத்தில் கடந்த 1 வாரமாக அனைத்து பகுதியிலும் பரவலாக கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக சென்னை, கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் தொடர் பலத்த மழையால் மக்கள் கடும் பாதிப்பு அடைந்துள்ளனர். இதைத்தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் மழைக்காலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட நிர்வாகங்களுக்கு தமிழக அரசு உத்தரவு பிறப்பித்து உள்ளது. அதில் நீர்நிலைகள் செல்லும் வழிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளது.

மேலும் வருவாய், நகராட்சி, மின்சாரம், வேளாண்மை, வனம், ஊராட்சி ஒன்றியம் உள்பட அனைத்து துறைகளை சேர்ந்த அலுவலர்கள் கொண்ட குழு அமைக்க வேண்டும். இந்த குழு நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி பகுதியில் ஆய்வு நடத்தி அறிக்கை அளிக்க வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளது.

<u>அதிகாரிகள் குழு ஆய்வு</u>

இதையொட்டி கூடலூர் நகராட்சி பகுதியில் ஆர்.டி.ஓ. வெங்கடாசலம் தலைமையில் தாசில்தார் அப்துல் ரகுமான், தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் ஷிபிலா மேரி, வனச்சரகர் செல்வராஜ், தீயணைப்பு படை நிலைய அலுவலர் அனில்குமார், நகராட்சி பணி மேற்பார்வையாளர் ராமகிருஷ்ணன் மற்றும் மின்சார வாரியம் உள்பட அனைத்து துறைகளை சேர்ந்த அதிகாரிகள் நேற்று கூடலூர் நகராட்சி பகுதியில் திடீர் ஆய்வு நடத்தினர்.

அப்போது நகராட்சி அலுவலகம் அருகே சாலையோரம் செல்லும் வாய்க்கால், அரசு மேல்நிலைப்பள்ளி முன்பு மண்மூடி கிடக்கும் வடிகால் வாய்க்கால்கள், காசிம்வயல், துப்புக்குட்டிபேட்டை பகுதியில் பொதுமக்கள் குடியிருப்புகளுக்குள் தண்ணீர் நுழையும் இடங்களை அதிகாரிகள் குழு பார்வையிட்டது. இதேபோல் கூடலூர்– ஊட்டி தேசிய நெடுஞ்சாலையோரம் ராஜகோபாலபுரம் பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் வாய்க்கால் மண் நிறைந்து கிடப்பதை அதிகாரிகள் குழு கண்டனர்.

<u>ஆக்கிரமிப்புகள்</u>

இதேபோல் ராஜகோபாலபுரம் ஆற்றுவாய்க்கால்களையொட்டி ஆக்கிரமிப்புகள் உள்ளது குறித்து அதிகாரிகள் குழு பார்வையிட்டது. இவ்வாறு பல்வேறு இடங்களில் ஆய்வு நடத்தப்பட்டது. இது குறித்து வருவாய் துறை அதிகாரிகள் கூறும் போது, மழைக்காலங்களில் வெள்ளம் உள்பட பல்வேறு பாதிப்புகள் ஏற்படாமல் இருக்க நீர்நிலைகள், மழைநீர் வடிகால் குறித்து அரசு உத்தரவின் பேரில் அனைத்து துறைகளை சேர்ந்த அதிகாரிகள் கொண்ட குழு அமைத்து ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

இதில் ஆக்கிரமிப்புகள் இருப்பின் மாவட்ட நிர்வாகத்தின் ஒப்புதல் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தனர்.

## ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் மலர்செடிகளில் விதைகள் சேகரிப்பு பணி தீவிரம்



ஊட்டி

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் உள்ள மலர் செடிகளில் இருந்து விதைகள் சேகரிக்கும் பணியில் ஊழியர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

2–வது சீசன்

நீலகிரியில் ஆண்டு தோறும் ஏப்ரல், மே ஆகிய மாதங்களில் கோடை சீசனும், செப்டம்பர், அக்டோபர் ஆகிய மாதங்களில் 2–வது சீசனும் நடக்கிறது. இந்த 2–வது சீசன் காலங்களில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அதிக அளவில் ஊட்டிக்கு வருவார்கள். சுற்றுலா பயணிகளின் வருகையை முன்னிட்டு அவர்களை கவரும் வகையில் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் மலர் செடிகள் நடவு செய்யப்படும்.

விதைகள் சேகரிக்கும் பணி

அதற்காக இந்த ஆண்டு தாவரவியல் பூங்காவில் 2 லட்சம் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு இருந்தது. இந்த மலர்செடிகளில் சீசன் காலத்தில் பூக்கள் மலர்ந்து இருந்தன. இது சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்தது.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக நீலகிரி மாவட்டத்தில் இடைவிடாமல் பெய்து வரும் மழையால் மலர்செடிகள் அழுகி வருகின்றன. இதனை தொடர்ந்து பூத்து ஓய்ந்த மலர் செடிகளில் இருந்து விதைகள் சேகரிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

சுற்றுலா பயணிகளுக்கு விற்பனை

இது குறித்து பூங்கா அதிகாரிகள் கூறியதாவது:–

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் சீசன் காலங்களில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதைகளை கொண்டு மலர்செடிகள் நடவு செய்யப்படுகின்றன. இந்த மலர் செடிகள் பூத்து ஓய்ந்ததும் அவற்றில் இருந்து விதைகள் சேகரிக்கப்பட்டு, தரம் பிரிக்கப்படும்.

இந்த விதைகள் பூங்காவில் சீசன் காலங்களில் செடி நடவு செய்ய பயன்படுத்தப்படுகிறது. மேலும் இங்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கும் குறைந்த விலையில் விதைகள் விற்பனை செய்யப்படுகிறது. இதனை சுற்றுலா பயணிகள் ஆர்வமுடன் வாங்கி செல்கின்றனர். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் அதிக விலைக்கு உரங்களை விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் வேளாண் அதிகாரி எச்சரிக்கை




பெரம்பலூர்,

பெரம்பலூர் மாவட்டத்தில் உரங்களை அதிக விலைக்கு விற்பனை செய்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என வேளாண் அதிகாரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக பெரம்பலூர் வேளாண்மை இணை இயக்குனர்(பொறுப்பு) ஆறுமுகம் வெளியிட்டுள்ள ஒரு செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:–

<u>கூடுதல் விலைக்கு விற்றால்...</u>

பெரம்பலூர் மாவட்டத்தில் நடப்பு பருவத்தில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களுக்கு தேவையான உரங்கள் தனியார் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தரமான மற்றும் தேவையான உரங்களை விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய மாவட்ட நிர்வாகம் உறுதியாக உள்ளது.

மத்திய அரசு ராசாயன உரங்களுக்கு உரச்சத்து அடிப்படையிலான மானியம் வழங்கி வருகிறது. எந்தவொரு உர மூட்டையிலும் மத்திய அரசு அந்த உரத்திற்கு வழங்கும் மானியத் தொகையும், உரத்திற்கான சில்லரை விற்பனை விலையும் அச்சிடப்பட்டிருக்கும். உர விற்பனையாளர்கள் உரங்களை விவசாய பயன்பாட்டிற்கு மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்.

வேளாண்மை அல்லாத பிற பயன்பாட்டிற்கு உரங்களை விற்பனை செய்யக்கூடாது. உரங்களுக்கு உரிய ரசீது கொடுக்க வேண்டும். அதிக விலைக்கு உரங்களை விற்பனை செய்யக்கூடாது. இதனை மீறுவோர் மீது உரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தகவல் தெரிவிக்கலாம்

எனவே நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு உரம் விற்போர் குறித்து வேளாண்மை இணை இயக்குநரின்(பொ) 99409 64438 என்ற செல்போன் எண்ணில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கும்பக்கரை அருவியில் தண்ணீர் கொட்டுகிறது சுற்றுலா பயணிகள் குளிக்க தடை



பெரியகுளம்

பெரியகுளம் அருகே கும்பக்கரை அருவியில் தண்ணீர் பெருக்கெடுத்து உள்ளதால் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டு உள்ளது.

சுற்றுலா பயணிகள்

தேனி மாவட்டம், பெரியகுளத்தில் இருந்து சுமார் 8 கிலோ மீட்டர் தொலைவில் கும்பக்கரை அருவி அமைந்துள்ளது. இயற்கை எழில் சூழ்ந்த மேற்குத்தொடர்ச்சி மலையின் அடிவார பகுதியில் அமைந்துள்ள இந்த அருவிக்கு கொடைக்கானல் மலை மற்றும் மேற்குத்தொடர்ச்சி மலை ஆகிய பகுதிகளில் பெய்யும் மழைநீர் வந்து சேரும்.

அதுமட்டுமின்றி இந்த அருவியில் ஆண்டுதோறும் நீர்வரத்து இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் தமிழகம் மட்டுமின்றி பல்வேறு மாநிலங்களில்

இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் கும்பக்கரை அருவியில் வந்து குளித்துவிட்டு செல்வார்கள். அத்துடன் அருவியை அடுத்துள்ள இயற்கை எழில் கொஞ்சும் வனப்பகுதிகளில் அவர்கள் குடும்பத்தினருடன் ஓய்வெடுப்பதும் வழக்கம். <u>நீர்வரத்து அதிகரித்தது</u>

இதற்கிடையே கடந்த வாரம் அருவியில் அதிக அளவில் தண்ணீர் பெருக்கெடுத்து வந்தது. இதனால் சுற்றுலா பணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டு இருந்தது. இந்தநிலையில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு தண்ணீரின் அளவு குறைந்து ஆபத்து ஏற்படாது என்ற நிலையினை எட்டியது. இதனால் பொதுமக்கள் உள்பட அனைவரும் அருவியில் குளிக்க அனுமதிக்கப்பட்டது.

இந்நிலையில் மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதி மற்றும் கொடைக்கானல் பகுதிகளில் நேற்று முன்தினம் பெய்த பலத்த மழையின் காரணமாக கும்பக்கரை அருவிக்கு நீர்வரத்து அதிகரித்தது. இதனால் அருவில் தண்ணீர் அதிக அளவில் கொட்டுகிறது. இதன் காரணமாக அங்கு சுற்றுலாப்பயணிகள் குளிக்க வனத்துறையினர் தரப்பில் மீண்டும் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

## தொடர்மழை எதிரொலி: சுருளி அருவிக்கு நீர்வரத்து அதிகரிப்பு



உத்தமபாளையம்,

தொடர்மழை காரணமாக சுருளி அருவிக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

<u>சுற்றுலா பயணிகள்</u>

தேனி மாவட்டத்தில் உள்ள சுருளி அருவி, இந்த பகுதியில் உள்ள சுற்றுலாதலங்களில் குறிப்பிட்டு சொல்லகூடியதாகவும், தேவர்கள் தவக்கோலம்

கண்டதால், ராமேஸ்வரத்துக்கு அடுத்த புனித தலமாகவும் சிறப்பு பெற்று விளங்குகிறது. ஹைவேவிஸ் மலைப்பகுதியில் இருந்து மூலிகை செடிகளுக்கு நடுவே புகுந்து வரும் தண்ணீர் சுருளியில் அருவியாக கொட்டுகிறது.

எனவே இதில் குளித்தால் பல்வேறு நோய்களும் குணமாகும் என்பது பொதுமக்களின் நம்பிகையாக உள்ளது. இத்தனை சிறப்புகள் அமையப்பெற்ற சுருளி அருவிக்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், திண்டுக்கல், மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை உள்ளிட்ட பிற மாவட்டங்களில் இருந்தும், கேரளாவில் இருந்தும் தினந்தோறு ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.

அணைகள் நிரம்புகின்றன

ஹைவேவிஸ் மலைப்பகுதியில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் ஹைவேவிஸ், தூவானம், மணலாறு உள்ளிட்ட ஏரிகளில் நீர்மட்டம் உயர்ந்து அணைகள் நிரம்புகின்றன. இதனால் சுருளி அருவிக்கு நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியுள்ளது.

தற்போது சபரிமலை அய்யப்பன் கோவிலில் மண்டல பூஜைக்கு நடை திறக்கப்பட்டுள்ளது. இதனால் சபரிமலைக்கு செல்லும் பக்தர்களில் பெரும்பாலானோர் சுருளி அருவியில் நீராடி செல்கின்றனர். இதன்படி நேற்றும் சுற்றுலா பயணிகள் உள்பட ஏராளமானோர் அருவியில் ஆனந்தமாக குளித்து சென்றனர்.